

கோகுலம்

16-7-1978 விலை 60 காசு



''ஏன்டா நம்ம கிரி கெட்டுப் போயிட்டானே காரணம் என்னவாக இருக்கும்?''
''ஓயாமல் கிரிகெட்டு விளையாடினதினாலே தானோ என்னவோ!

சீ.கோ.நி. முருகேசன்




முதல்வர்: சார் சேதி தெரியுமா?
மற்றவர்: சமாசார் நியூஸ்தானே?
முதல்: இல்லே. இது சம்சார் நியூஸ்.
மற்றவர்: அப்படி ஒரு நியூஸ் சர்வீஸ் வந்திருக்கா சார்?
முதல்: என் மனைவி-சம்சாரம் சொன்னது சார்!

எஸ். சந்திரசேகர்



ஒருவர்: அஞ்சு, ஆறு, ஏழு எல்லாரும் இங்கே வாங்க.
மற்றவர்: என்ன சார் இது? குழந்தைகளை நம்பர் சொல்லிக் கூப்பிடறீங்க?
அவர்: அதுவா? பேரோட சுருக்கம். அஞ்சலை, ஆறுமுகம், ஏழுமலைன்னுபேரு.

-சாரதா



பாதிரியார்: நிறையப் பாவங்களைச் செய்து விட்டேன் என்று பாவ மன்னிப்புக் கேட்க வந்திருக்கிறாயே உன் பெயர் என்ன?
வந்தவன்: புண்ணியகோடிங்க.

- எம். கல்பரு



ஆரம்பம்..!

ஒருவர்: நான் தலைகீழாக நின்று தான் கற்றுக் கொண்டேன்.
நண்பர்: எதை?
ஒருவர்: சிரசாசனம் போடுவதை!

- எஸ். சந்திரசேகர்



''எந்த மரத்திலிருந்து காற்று நன்றாக வரும்?''
''விசிறிவாழை மரத்திலிருந்து!''

-டி.வி.



மலர் - 6 இதழ் - 10
ஜூலை 16, 1978.
காளயுக்தி - ஆனி 32



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் — 'பாரதியார்

கோகுலம்
சந்தா விபரம்:
இந்தியா:
ஒரு வருடம் — ஆறு மாதம்
ரூ. 15-00 — ரூ. 7-50
வெளி நாடுகள்:
ஒரு வருடம் ரூ. 40-00



தேன் துளிகள்

○ தேனீக்கு ஐந்து கண்கள். மூன்று சாதாரணமானவை. மற்ற இரண்டு மிகவும் நுட்பமானவை. ஆயிரக்கணக்கான 'லென்சு'கள் கொண்டவை.

○ ஒருதேனீக்கு ஐயாயிரம் நாசித் துவாரங்கள் உள்ளன. மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஆப்பிள் மரத்தின் வாசனையை நுகரக் கூடியவை அவை.

○ அதன் இரண்டு ஜோடி இறக்கைகளும் சேர்ந்து நிமிடத்துக்கு 16,000 தடவைக்கு மேல் அடிக்கிறது. தேனீ பல இடங்களில் அலைந்து தேனைச் சேகரிக்கிறது. தேனை எடுத்தவுடன் எங்கும் தங்குவதில்லை. நேரே கூட்டை நோக்கி வந்து விடும்.

○ தேனீயைப் போல் சுறுசுறுப்பான ஜீவன் எதுவும் கிடையாது. உழைப்பில் முதன்மையானது. ஒரு ஸ்பூன் தேனைச் சேகரிக்க அதன் வாழ்நாளையே செலவிடுகிறது.

○ ஒரு பவுண்டு தேன் சே. தேனீக்கள் கிட்டத்தட்ட எண்பதாயிரம் கிலோ மீட்டர் தூரம் மொத்தத்தில் சுற்ற வேண்டியிருக்கிறது. இது உலகத்தை இரண்டு தடவை சுற்றி வருவதற்குச் சமம்!

○ உலகில் சுமார் ஒரு லட்சம் செடிகள் தேனீயின் உதவி இல்லாமல் காய்க்கவோ விதை உற்பத்தி செய்யவோ இயலாது.

○ ஒரு தேனீக் கூட்டில் குறைந்த பட்சம் ஐம்பதாயிரம் தேனீக்கள் வசிக்கும். தேன் எத்தனை ஆண்டுகளானாலும் கெட்டுப் போகாது.

○ ஒரு தம்ளர் தண்ணீரில் இரண்டு சொட்டுத் தேனைவிட வேண்டும். அது தண்ணீரில் கரையாமல் இருந்தால் நல்ல சுத்தமான தேன் எனத் தெரிந்து கொள்ளலாம்.

—தொகுப்பு : வெ. சுப்புராமன்.

மண் பறித்துண்ணேல்

நல்வழி



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி
சுவாமிகள்

ஒருவர் பூமியை மற்றொருவர் அபகரித்துக் கொள்ளக்கூடாது. இந்த உபதேசமானது இன்று நாட்டிற்கு அவசியமானது.

ஜனங்களுக்காகவும் ஜனங்களின் நல்வாழ்வுக்காகவும் கோவிலில் இறைவன் அருள் பெறுவதற்காகவும் கோவிலில் ஊழியம் செய்பவர்களுக்காகவும் அந்தக் காலத்தில் அரசர்களால் சர்வமான்யமாக—இனுமாக அநேக பூமிகள் அளிக்கப்பட்டன. அது பரம்பரை பரம்பரையாக இருந்து வந்தது. கொஞ்ச காலத்திற்குப் பிறகு, ஜமீன்தார்களுக்கும் — சிற்றரசர்களுக்கும் வரிகட்ட வேண்டியநிலை ஏற்பட்டது. தற்காலத்தில் நமது அரசாங்கத்திற்கு வரி கட்டவேண்டிய நிலை உள்ளது. மேலும் உழுபவர்களுக்கே நிலம் சொந்தம் என்ற நிலை உருவாகிக் கொண்டே வருகிறது.

பாகப்பிரிவினை ஏற்படும் பொழுதும் அடுத்தவர்களுக்கு நிலங்களை விற்கும்பொழுதும் நிலங்களைச் சரியானபடி, கூடக் குறைவு இல்லாத முறையில், அளந்து பிரித்து எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற நீதியை மண் பறித்துண்ணேல் என்னும் வாசகம் நினைவூட்டுகிறது. ஆனல் இன்று ஒருவருக்குச் சொந்தமான முழு பூமியையும் இன்னெருவர் அபகரித்துக் கொள்ளும் காரியங்கள் செய்யப்படுகின்றன.

தனிமனிதனுடைய பூமியை ஒருவிதமாக எடுத்துக்கொண்டாலும், மாற்று வழியில் அவன் வேறு வேலை செய்து பிழைத்துக்கொண்டு விடலாம். ஆனல் கோவில் பூமியையோ கோவில்பூமியின் வருமானத்தையோ அபகரித்துக் கொண்டுவிட்டால், கோயில்களுக்கு மாற்று வழியில் சம்பாத்தியம் கிடையாது. கோவில் பூமி வழியாக வருமானம் வராதபோது, உத்ஸவம், நித்ய பூஜை முதலியவைகள் சரிவர நடக்க முடியாமல் போய்விடுகின்றன. கோவில் நித்ய பூஜைகள். உத்ஸவங்கள் சரிவர நடக்காவிட்டால் அதனல் தெய்வ அபசாரம் ஏற்பட்டு நாட்டிற்கே பெரிய கெடுதல் ஏற்பட்டு விடுகிறது. நாட்டிற்கே கெடுதல் சம்பவிக்கும்போது நாட்டு மக்கள் கஷ்டப்படுகிறர்கள். ஆகவே முக்கியமாகக் கோவில் வருமானங்களையும் கோயிலுக்குச் சொந்தமான பூமியையும் யாரும் பறித்துக்கொள்ளக் கூடாது.

பாபா சொன்ன பாப்பாக் கதைகள்

ரா. கணபதி



ராமபிரான் வானர சேனையோடு கூட இலங்கைமீது படையெடுப்பதற்காகப் போய்க் கொண்டிருந்த சமயம்.

அன்று பௌர்ணமி. பூர்ண சந்திரன் குளுகுளுவென நிலவைப் பொழிந்து கொண்டிருந்தான்.

ராமச்சந்திரன் பெயரிலேயே ஒரு சந்திரன் இருக்கிறதல்லவா? அதற்கேற்ப அவரும் குளுகுளுவென எப்போதும் அன்பைப் பரப்பிக் கொண்டிருப்பார்.

மனிதரைப் போல வேஷம் போட்ட ஸ்வாமி அவர். தெய்வம் என்பதால் தம்மிடம் மக்கள் பயந்து விலகியிருந்துவிடாமல், அன்போடு ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காகவே மக்களில் ஒருவரைப்போல வாழ்ந்தார். மனிதராக இருந்தே ஸத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை முதலியவற்றை அப்பழுக்கு இல்லாமல் தாம் பின்பற்றிக் காட்டினால்தான், மற்ற மக்களும் இந்த நெறிகளைக் கடைப் பிடிப்பார்கள் என்பதும் அவர் மானுடராக அவதரித்ததற்கு ஒரு காரணம்.

இப்போது மனிதரைப் போலவே தமக்குப் பிரயாணத்தில் களைப்பு ஏற்பட்டதாக நடித்தார் ஸ்ரீராமன். வானர ராஜனான ஸுக்ரீவனின் மடியில் தலையை வைத்துக்கொண்டு காட்டிலே படுத்துக் கொண்டார்.

விளையாட்டாகப் பல விஷயங்களை வானரர்களுடன் உரையாடிய ராமர் சந்திரனையே சற்று உற்றுப்பார்த்துவிட்டு, ''வெள்ளித்தட்டுப் போன்ற இந்த அம்புலியின் நடுவே ஒரு கரிய திட்டு இருக்கிறதே, அது என்ன?'' என்று கேட்டார்.

உடனே வானரர்களில் ஒவ்வொருவர் ஒவ்வொரு காரணம் சொன்னார்கள். ஒரு வானரம் அந்தக் கருந்திட்டை சந்திரலோகத்தின் அதிசய மான் என்றது. இன்னொரு வானரம் முயல் என்றது. வேறொரு புத்திசாலி வானரம் பூமியிலுள்ள கடலின் நிழல்தான் சந்திரனுக்குள் பட்டுக் கறுப்பாகத் தெரிகிறது என்றது. அதைவிட புத்திகூர்மையுள்ள பிறிதொரு வானரம், ''இல்லை, சந்திரனுக்குள்ளேயே இருக்கும் மலைத்தொடர்கள் தாம் இப்படித் தெரிகின்றன'' என்றது. அறிவாளியான மற்றொரு வானரமோ ''அது மலைத்தொடராக இல்லாமல், சந்திர மண்டலத்தில் உள்ள குழியான நில வெடிப்பாகவும் இருக்கலாம்'' என்றது.

ஒவ்வொரு விடையையும் கேட்டு மகிழ்ச்சியுடன் சிரித்துக் கொண்டிருந்த ராமர் அனைவரிலும் பெரிய புத்திமானான அநுமனை அன்புறப் பார்த்தார்.

''ஆஞ்ஜநேயா! சந்திரனில் உள்ள கருமைக்குக் காரணம் என்னவென்று உனக்குத் தோன்றுகிறது?'' என்று வினவினார்.

ஸ்ரீராமரையே அதுவரை மெய்ம்மறந்து தரிசித்துக் கொண்டிருந்த மாருதி சட்டென்று தலையைத்தூக்கி, வானத்தே விளங்கிய பூர்ணசந்திரனைப் பார்த்தார். சற்றும் யோசனை செய்யாமல் உடனே கூறினார்: ''ஸ்ரீராமா! சந்திரன் உனக்கு முகம் பார்க்கும் கண்ணாடியே! உன்னுடைய சியாமள (கரிய) முகம்தான் அந்தச் சந்திரன் கண்ணாடியின் நடுவே கருந்திட்டாகக் காண்கிறது. அறியாதவர்கள் அதைச் சந்திரனுக்குக் களங்கம் என்று சொல்வார்கள். உண்மையில், களங்கமே இல்லாத ராமசந்திரப் பிரபுவின்

பிரதிபிம்பம்தான் வானத்துச் சந்திர னில் தெரிகிறது.''

அன்பொளி பெருகும் அம்புலியாக ஸ்ரீராமர் புன்னகை புரிந்தார்.

• • •

''ஸர்வம் ராம மயம்'' — எங்கு எதைக் கண்டாலும் அதில் ஸ்ரீராம ரையே கண்டார் ஹநுமந்தர். தமக் குள்ளும் ராமரையே அவர் நிரப்பிக் கொண்டிருந்தார்.

எந்தத் தெய்வத்துக்குமே இரண்டு விதமான வடிவங்கள் உண்டு. தலையி லிருந்து பாதம் வரையில் அவயவங்க ளோடு உள்ள வடிவம் ஒன்று. இது கண்ணுக்குத் தெரியும் ஒளி உருவம். இன்னொரு வடிவம் காதுக்குக் கேட் கும் ஒலி வடிவம். அதுபோல் ராம பிரானுக்கும் ''ராம'' என்ற பெயரே ஓர் உருவம். கண்ணினால் பார்க்கிற ரூபத்திடமிருந்து நாம் என்னென்ன நலன்களைப் பெறலாமோ, அந்த நலன்கள் யாவற்றையும் பகவானின் நாமங்களைச் சொல்லி ஜபம் செய்வ தாலும் பாடுவதாலும் பெற்றுவிட லாம்.

மாருதி ஸ்ரீராமருடைய நாமத்தை ஒலி வடிவில் தமக்குள் நிரப்பிக் கொண்டு தாமே ராம மயமாக இருந்தவர். அது ஒரு சந்தர்ப்பத்தில் மிகவும் ரஸமான முறையில் வெளியா யிற்று.

ஸ்ரீராமருக்குப் பட்டாபிஷேகம் ஆயிற்று.

அச்சமயத்தில் ஸீதா தேவிக்கு ஆஞ்ஜநேயரிடம் நன்றிப் பெருக் கெடுத்தது. தான் ராவணனிடம் சிறைப்பட்டு, மனமொடிந்து, தற் கொலை செய்து கொள்ள இருந்த சமயத்தில் ஹநுமந்தன் வந்துதானே உயிர் காத்தான்? தன்னை மட்டு மின்றி ராம — ராவண யுத்தத் தில் எல்லா வீரர்களும் மரித்து விழுந்தபோது ஸஞ்சீவி மலையைக் கொண்டுவந்து அத்தனை பேருக்குமே உயிர் அளித்த சமயஸஞ்சீவி அவனே அல்லவா? அவனது பராக்கிரமமின்றி வெற்றி ஏது? இந்தப் பட்டாபிஷேகம்தான் ஏது? என்று எண்ணிய ஸீதம்மா மாருதிக்கு வெகுமதியாக ஓர் உயர்ந்த பரிசளிக்க எண்ணினாள். விலை மதிப் பில்லாத தனது முத்து மாலையையே ஆஞ்ஜநேயருக்கு அளிக்கத் தீர்மானித் தாள்.

ஸீதம்மா முத்துமாலையைத் தன் கழுத்திலிருந்து கழற்றினாள். ஆயினும் கற்பரசியாதலால் கணவரின் அநுமதி யின்றி அதை அனுமனுக்கு அளிக்கக் கூடாதெனத் தயங்கினாள். ஸ்ரீராமச் சந்திரரை நோக்கினாள்.

ஸீதாப் பிராட்டி வாய்திறந்து பேசா விட்டாலும் அவள் மனத்தி லிருந்ததை ராமபிரான் புரிந்துகொண் டார். சொல்லாமலே புரிந்துகொண்டு அதற்கு அனுகூலமாக நடக்கும் ''இங்கிதம்'' என்ற உத்தமகுணத்தில் சிறந்தவர் ராமர். அதேபோல், ஒரு பொதுச் சபையில் எவர் மனமும் புண்படாதபடி வெகு பண்புடன் நடந்து கொள்வார். மாருதிக்கு மட்டுமே ஸீதம்மா பரிசு தந்தால் மற்றவர்கள் வருத்தப்படக் கூடு மல்லவா? அவரிடம் மட்டும்



அன்னைக்கு அதிக அன்பு என்ற வித்தியாச உணர்ச்சி மற்றவர்களுக்கு ஏற்படக்கூடாதல்லவா? ஆகையால் ஸீதையிடம், ''தேவி! எவன் புத்தி வன்மை, வாக்கு வன்மை, புஜபல பராக்கிரமம், பக்தி, பணிவுமனப் பான்மை எல்லாவற்றிலும் சிறந்தவன் என்று உனக்குத் தோன்றுகிறதோ அவனுக்கு இந்த முத்துமாலையைக் கொடு'' என்றார்.

இத்தனை நலன்களும் மாருதி ஒருவரிடமே ஒருங்கு சேர்ந்திருந்ததாக மற்ற அனைவரும் மனமாரக் கருதியதால் அவர்களாக மாருதியை முன்னுக்குத் தள்ளிவிட்டுத் தாங்கள்பின் வாங்கிக் கொண்டார்கள்!

கிடைத்தற்கரிய பரிசான முக்தா ஹாரத்தை ஸீதம்மா ஹநுமாருக்குக் கொடுத்தாள்.

ஆனால், ஆச்சரியம்! பரிசு பெற்றதில் ஹநுமார் மகிழ்ச்சி அடையவில்லை. ராம நாம ஜபம் புரிவதையே வாழ்வின் தலைசிறந்த வெகுமதியாகக் கருதும் தனக்கு வேறெந்த வெகுமதியும் பெரிதாகத் தெரியாது என்று தேவி உணராததால்தானே முத்து மாலையை அளித்தாள்? ராம நாமம் என்ற ரத்தினத்தைப் பெற்ற தமக்கு நல்முத்தும் பொருட்டில்லை என்று அன்னைக்கு உணர்த்த வேண்டும்'' என்று எண்ணினார் ஹநுமந்தர்.

உடனே அந்த முத்துமாலையை வாயில் போட்டுக் கடித்துக் கடித்துக் கீழே துப்பலானார்.

அவரது செய்கை சபையோர் அனைவருக்கும் வியப்பை, வருத்தத்தை அளித்தது. வானரர்களுக்கோ, 'நம்மைச் சேர்ந்த ஒருவன் இப்படி சபையில் அநாகரிகமாக நடந்து கொள்கிறானே' என்று அவமானமாக இருந்தது. ஸீதையும், லக்ஷ்மண, பரத, சத்ருக்னரும் கூடக் 'கடைசியில் பேரறிவாளனான ஆஞ்ஜநேயனும் குரங்குப் புத்தியைக் காட்டிவிட்டானே!' என்று நினைத்தார்கள்.

ஸ்ரீராமர் மட்டும் குமிண்நகை புரிந்த வண்ணம் பேசாதிருந்தார்.



ஒரு சிலர் ஆத்திரமுற்று ஹநுமாரிடமே அவரது விசித்திரச் செயலுக்குக் காரணம் கேட்டனர். ''முத்தைத் தின்று ருசி பார்ப்பதா? அதற்குச் சுவை உண்டா?'' என வினவினர்.

ஹநுமான் சொன்னார்: ''ராம நாமம்தான் அனைத்துக்கும் சுவையூட்டும் அமுதம். ராமநாமத்தைவிட உயர்ந்தது எதுவுமில்லை என்ற உணர்வோடு எந்த வஸ்துவைத் தந்தாலும், அந்த வஸ்துவுக்கும் இனிப்பு உண்டாகிவிடும். இந்த முத்துமாலையில் 'ராம ரஸம்' என்ற தித்திப்பு இருக்கிறதா என்று அறியவே வாயில் போட்டுக் கொண்டேன். அது இனிக்காததால் உமிழ்ந்து விட்டேன். பொதுச்சபையில் துப்பியதற்காக மன்னிப்புக் கோருகிறேன்.''

அவர் கூறியது சபையினருக்குப் பொருளாகவில்லை. 'நாமமாவது? அதற்கு ரஸமாவது?' என்று புரியாமல் கவித்தனர்.

அடக்கத்தில் சிறந்த ஹநுமானோ அதற்குமேல் ஏதும் பேசவில்லை. ''பீபரே ராமரஸம்'' (ராமச் சுவையைப் பருகு) என்று பாடிக் கொண்டிருந்தார்.

இதுகாறும் மௌனம் சாதித்து வேடிக்கை பார்த்த ராமமூர்த்தியே இப்போது, ''ராம நாமத்தைப் பருகிப் பருகி அதன் மதுரச் சுவையறிந்த மாருதிக்குத் தான் இவ்விஷயம் தெரியும். அவனுடைய உடலின்மீது உங்கள் செவியை வைத்தீர்களானால் புரிந்து கொள்வீர்கள்'' என்று புதிர் போட்டார்.

அவ்வாறே ஸ்ரீராமரின் சகோதரர்களும், விபீஷணன் முதலானோரும் ஆஞ்ஜநேயரின் உடல்மீது தங்களது காதுகளைப் பொருத்திக் கொண்டனர்.

என்ன அற்புதம்! மாருதியின் தேகத்திலுள்ள ஒவ்வொரு மயிர்க் காலிலிருந்தும் 'ராம ராம'' என்கிற ஒலி எழுந்து அவர்களது செவிகளுக்குள் பாய்ந்தது. பாயும்போதே அந்த திவ்விய நாமம் தேனினும் இனிப்பாய்த் தித்திக்கவும் செய்தது! தம்முடைய உருவத்திலேயே தெய்வத்தின் சுவையை உணர்ந்தார் மாருதி. மாருக தெய்வத்தின் இருவுருவங்களிலும் கூட தெய்வத் தன்மையை உணராதவர்களாக நாம் இருப்பதே அடுத்த இதழில் ஒரு நகைச்சுவைக் கதை மூலம் பகவான் பாபா விளக்குகிறார்.

''என்ன அரியாயங்க? இர்தப் பல்லவன் ஏறுத பிளாட்பாரமே ஊரில் கிடையாதா?''
''ஏன் இல்லே? இதுவரைக்கும் எந்த ரயில் பிளாட்பாரத்திலும் பல்லவன், ஏறியதே கிடையாது!''



ஆசனம் போடுங்கள்—
ஆரோக்கியமாக வாழுங்கள்.


1


2


3


4

யோகாசனங்களைப் பற்றிக் கேட்டிருப்பீர்கள். உங்களில் சிலர் அது பற்றிய புத்தகங்களைப் படித்துமிருக்கலாம். ஆசனப் பயிற்சிகளைச் செய்யும் அப்பாவோ, அண்ணாவோ உங்களில் எத்தனை பேருக்கு உண்டு? உள்ளம் உடல் இரண்டையும் தூய்மைப்படுத்தக் கூடியவை யோகாசனங்கள். எந்த வயதிலும் நீங்கள் வலுவோடும் வனப்போடும் இருக்க வேண்டாமா? கோகுலத்தின் மூலம் உங்களுக்குச் சில எளிய ஆசனங்களைக் கற்றுத் தரப் போகிறோம். ஆரோக்கிய வாழ்க்கையின் ரகசியமான இந்த ஆசனங்களை நீங்கள் மிக எளிதாகச் செய்யலாம். பலனோ ஏராளம்.

(1) தரையில் கால்களை விரைப்பாக (வளைக்காமல்) நீட்டி உட்காருங்கள். முதுகு கூன் போடாமல் நிமிர்ந்து இருக்கட்டும்.

(2) நீட்டிய கால்களில் வலது காலை மடக்கி வலது பாதத்தை இடது தொடைக்குக் கீழாகக் கொண்டு போங்கள்.

(3) இதே போல இடது முழங்காலையும் மடக்கி வலது காலைத் தொடும்படி அமைத்துக்கொள்ளுங்கள்.

(4) கைகள் இரண்டையும் இரு முழங்கால்களின் மீதாக வைத்துக் கொண்டு அப்படியே அமைதியாக உட்கார்ந்திருங்கள்!

" 'ப்பூ' சம்மணம் போட்டு உட்காருவதற்கு இத்தனை தடபுடலா? இது என்ன பெரிய்ய...ய ஆசனம்?" என்று நீங்கள் கிறீச்சிடுவது காதில் விழுகிறது. ஆசனங்களிலேயே இதுதான் மிகச் சுலபமானது. ஆனால் முதுகை நிமிர்த்திய நிலையில் ஆழ்ந்து சுவாசித்துக் காற்றை நிதானமாக உள்ளுக்கிழுத்துச் சில வினாடிகள் சுவாசப் பையிலேயே தாங்க வைத்துப் பிறகு மெதுவாக வெளிவிடுங்கள். இதே நிலையில் உங்களால் எவ்வளவு நேரம் உட்கார்ந்திருக்க முடியும்? சும்மா உட்கார்ந்திருப்பது சுலபமல்ல என்பது கொஞ்ச நேரத்திலேயே புரிந்துவிடும். உங்களுக்கு. ஆனால் இப்படித் தினம் சிறிது நேரம் உட்கார்ந்திருக்கப் பழகிவிட்டால் உங்களுக்கு நிமிர்ந்த கம்பீரமான தோற்றம் கூடும். தலை, கழுத்து முதுகு ஆகியவை ஒரே நேர் கோட்டிலிருக்கும்படியாக நிமிர்ந்து உட்கார வேண்டும். அடுத்த இதழில் வேறொரு ஆசனம். அதுவரை இதைப் பயின்று வாருங்கள்,

வி. கே. யெம்.


1



2


3


4

குட்டிக் கதைகள்

ஜான் கே – என்பவர் செய்யுள் வடிவில் எழுதியவை



ஒரு சிங்கக்குட்டி புகழ் மாலைகளையும் விருந்துச் சாமான்களையும் விரும்பிக் கேவலமான மிருகங்களுடன் சேர்ந்து அலைந்தது. எந்நேரமும் அது கழுதை களுடனேயே பொழுது போக்கியது. அந்தக் கூட்டத்தில் சிங்கக் குட்டிக்குத் தான் தலைமைப் பதவி. நீண்ட நாள் சகவாசத்தால் அது கழுதைகளைப் போலவே நடக்கவும், பார்க்கவும், கத்தவும், கனைக்கவும் ஆரம்பித்து விட்டது. காது ஒன்று மட்டும்தான் கழுதைக்கு அமைந்ததுபோல் இல்லை. அது ஏதாவது தமாஷாகச் சொல்லத் தொடங்கினால் போதும், சொல்லி

ஒரு ராஜா நோய்வாய்ப் பட்டிருந் தார். அவருடைய முகமும் கண்களும் பிரகாசமாக இருந்தன. நன்றாகச் சாப்பிட்டுக் கொண்டும் இரவில் நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டும் இருந்தார். ஆனாலும் தாம் நோய்வாய்ப் பட்டிருப்பதாக அவர் சொன்னார். எத்தனையோ வைத்தி யர்கள் வந்து பார்த்தார்கள். ஒருவ ராலும் அவர் நோயைக் குணப்படுத்த முடியவில்லை. அதனால் ராஜா அவர்களு டைய தலையையெல்லாம் வெட்டி விடும்படி உத்தர விட்டார்.

ஒருநாள் இரண்டு பிரபல வைத்தி யர்கள் வந்தார்கள். ஒருவர் பரம ஏழை; வைத்திய சாஸ்திரங்களைக் கரைத்துக் குடித்தவர். மற்றொருவர் வைத்திய சாஸ்திரத்தில் ஒரு பக்கம் கூடப் புரட்டிப் பார்க்காதவர். ஆனால் அவரிடம் சிகிச்சைப் பெற்ற நோயா ளிகள் அவருக்கு நிறையப் பணம் கொடுத்தார்கள்; அவரிடம் வைத் யம் செய்து கொண்டவர்கள் இறந்து விட்டால் அவர்களுடைய சந்ததிகள் வைத்தியருக்கு இரட்டிப்பாகப் பணம் கொடுத்தார்கள்.

இரண்டு வைத்தியர்களும் அரசரை நன்கு பரிசோதித்துப் பார்த்தார்கள். பரிசோதித்துப் பார்த்த பிறகு வைத்திய சாஸ்திரங்களைக் கரைத்துக் குடித்தவர் அரசருக்கு ஒருநோயும் இல்லை என்று சொன்னார். அப்பொழுதே அவருடைய தலையை வெட்டிவிட உத்தரவு பிறப் பித்தார் அரசர். மற்றொரு வைத்தியர் சொன்னார்: ''மகிழ்ச்சியோடு இருக்கும் ஒருவனுடைய சட்டையை அரசர் தம் உடம்பில் போட்டுக்கொண்டு ஒருநாள் இரவு தூங்கினால் போதும், நோய் குணமாகிவிடும்.''

அரண்மனை வேலையாட்கள் குதிரை களில் ஏறிக்கொண்டு, மகிழ்ச்சியோடு இருக்கும் மனிதனைத் தேடி நாலா பக்கமும் போனார்கள். பணக்காரர் களாக மாட்டோமா என்று ஏங்கும் ஏழைகளையும், தங்களை ஏழைகளாக நினைத்துக்கொண்டு கவலைப்படும் பணக் காரர்களையும் பார்த்தார்கள். மனைவி இறந்ததற்காக அழும் ஒருவ னையும், மனைவி இறக்காததற்காக அழும் ஒருவனையும் பார்த்தார்கள். யாருமே மகிழ்ச்சியோடு இல்லை. கடைசியில் ஒரு கிராமத்தின் அருகில் ஒரு பிச்சைக்காரனைப் பார்த்தார்கள். அவன் உற்சாகமாக 'விசில்' அடித்துக் கொண்டும், பாடிக் கொண்டும், சிரித்துக்கொண்டும், புல்தரையில் புரண்டு கொண்டு இருந்தான். அவன் தான் மகிழ்ச்சியோடு இருப்பவன்

உங்களுக்காகத் தமிழில் தொகுத்தவர்

கு. அழகிரிசாமி

முடிக்கு முன்பே கழுதைகள் — ரசித்துப் பல்லை இளிக்கும். சிங்கக்குட்டி சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் அவை பாராட்டிக் கனைக்கும். சிங்கக் குட்டி கனைப்பதை விண்ணளாவப் புகழ்ந்து, ''மகாராஜா! எவ்வளவு தத்ரூபமாகக் கனைக்கிறீர்கள்!'' என்று பாராட்டும். சிங்கக்குட்டி இந்த முகஸ்துதிகளால் தற்பெருமை கொண்டு தன் தந்தையிடம் ஒருநாள் வந்து பெருமையோடு கனைத்துக் காட்டியது. இதைக் கேட்ட சிங்கம், ''சிச்சீ! சிங்கக்குட்டி கழுதைபோல் கனைப்பதா இதிலே தற்பெருமை வேறு? தற்பெருமைக்காரர்கள் தங்கள் அவமானத்தையே தம்பட்டம் அடிப்பவர்கள் என்பது சரியாகப் போய் விட்டதே!'' என்று கடிந்துகொண்டது.

அதற்குச் சிங்கக்குட்டி, ''நீ என்ன இந்த மாதிரி சொல்கிறாய்? நான் கனைப்பதைக் கேட்டுக் கழுதைகள் எப்படியெல்லாம் புகழ்ந்திருக்கின்றன என்று உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டது.

''மூடர்கள் புகழ்வதைக் கேட்டு மூடர்கள்தான் மகிழ்வார்கள். மூடக் கழுதைகள் புகழ்வதைச் சிங்கங்களும் மற்ற உயர்ஜாதி மிருகங்களும் லட்சியம் செய்யும் வழக்கமே கிடையாதே!'' என்றது சிங்கம்.

என்று தீர்மானித்த அரண்மனைச் சேவகர்கள், ''அய்யா, உன் சட்டையை ஒருநாள் இரவுக்கு நீ இரவல் கொடு. நாங்கள் நூறு ரூபாய் தருகிறோம்'' என்றார்கள். பிச்சைக்காரனோ, ''சட்டையா? என்னிடம் சட்டை ஏது?'' என்று சொல்லிவிட்டு, விழுந்து விழுந்து சிரித்தான்.

கடைசிவரையில அவர்களால் மகிழ்ச்சியோடு இருக்கும் ஒருவனைப் பார்க்கவே முடியவில்லை. தேடிச் சென்ற அத்தனைபேரும் வெறுங்கையோடு திரும்பி வந்தார்கள். அரசர் பார்த்தார்; உலகத்தில் மனிதர்கள் எல்லோரும் ஒருவகையில் கஷ்டப் பட்டுக் கொண்டிருப்பதைக் கவனித்தார். தாம் மட்டும் அரண்மனையில் அடைத்துக் கொண்டு கிடப்பதையும், நோயாளி என்று நினைத்து அவஸ்தைப் படுவதையும் எண்ணி மனம் வெட்கினார். எல்லா ஜன்னல்களையும் திறந்துவிட்டு, உள்ளே சுத்தமான காற்று வீசும்படிச் செய்தார். வெளியே சென்று தமக்குத் தோன்றிய முறையில் கஷ்டப்பட்டு உழைத்தார். மக்கள் அவரை வாழ்த்தினார்கள்; நாட்டில் மகிழ்ச்சி பூத்தது. அரசரும் ஆரோக்கியமும் உற்சாகமும் அடைந்தார்.



ஓர் ஓநாய் ஒன்று பசியோடு ஒரு ஆட்டுக் கிடையை நோக்கி வந்தது. கிடைக்குக் காவலாகப் படுத்திருந்த நாய் உடனே ஓநாயைத் துரத்தியது. இரண்டும் முன்னும் பின்னுமாகக் காட்டில் ஓடின. கடைசியில் இரண்டும் தற்காலிகமாகத் தமக்குள் சமாதானம் செய்து கொண்டன. அப்போது நாய் சொன்னது: ''பலசாலியான நீ பலவீனமான ஆடுகளைக் கொல்லலாமா? காட்டில் பன்றி, சிங்கம் போன்றவற்றின் ரத்தத்தை உறிஞ்சுவதல்லவா உனக்குப் பெருமை? பெரிய மனம் படைத்தவர்களுக்கு உள்ள இரக்க குணம், உன்னைப்போன்ற கொடியவர்களுக்கும் கோழைகளுக்கும் எப்படி உண்டாகும்? போகட்டும், இனியாவது இரக்கம் காட்டி ஆடுகளை விட்டுவிட்டு வீரனாக நடந்து கொள்.''

அதற்கு ஓநாய் சொன்ன பதில்: ''நண்பா, பசியைத் தணிக்க ஓநாய்களாகிய நாங்கள் எதையாவது

ஓர் ஆந்தை தன்னை மிகப் பெரிய மேதை என்று நினைத்துக்கொண்டது. சாக்ரட்டீஸ் போன்ற தத்துவ ஞானிகளோடும் தன்னை ஒப்பிட்டுக் கொண்டது. சாக்ரட்டீஸ் செய்தது போலவே இந்த ஆந்தையும் ஒரு பாடசாலையைத் தொடங்கியது. அது பெரிய பெரிய வார்த்தைகளைப் போட்டுத் தடபுடலாகப் பேசுவதைப் பார்த்து எல்லோரும் அதன் மேதாவிலாசத்தையும் பாடசாலையையும் புகழத் தொடங்கி விட்டார்கள். ஏராளமான மாணவர்களும் அந்தப் பாடசாலையில் சேர்ந்தார்கள். ஓர் அன்னம் தன் குஞ்சை இந்தப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பியது. ஒரு கோழியும் தன் குஞ்சைக் கொண்டு வந்து சேர்த்தது. விஞ்ஞானம் படிப்பதற்காக ஒரு சிலந்தி வந்தது. ஒரு கழுதை சங்கீதம் கற்க வந்தது. மாணவர்கள் அனைவரும் வாலிபமாகி ஏதேனும் ஒரு வேலை



ஓர் ஆந்தை ஒரு தானியக் களஞ்சியத்தில் வசித்து வந்தது. அது வெளியே எங்கும் சுற்றுவது கிடையாது. அங்கேயே இரை தேடிக் கொண்டு, தனியாக இருந்து மனக் கோட்டைகள் கட்டிக் கொண்டிருக்கும்.

ஒருநாள் காலையில், களஞ்சியத்தின் அருகில் உள்ள ஓர் மரக்கிளையில் அது உட்கார்ந்திருந்தது. அப்போது ஒரு குடியானவன் அங்கே வந்தான். அவனைப் பார்த்து ஆந்தை தனக்குத் தானே பின்வருமாறு சொல்லிக் கொண்டது.

''மனிதன் ஒரு புத்திசாலி மாதிரி பாவனை செய்து கொண்டிருக்கிறானே ஒழிய, உண்மையில் அவனுக்கு மூளை என்பதே கிடையாது. இல்லையென்றால் அவன் என்னைப் பாராட்டுவதை விட்டு, வானம்பாடிகளையும், இராப் பாடிப் பறவைகளையும் புகழ்வானா? என்னுடைய அறிவு விசாலத்தைப் புத்திசாலித்தனம் நிறைந்த பறவைகள் நன்கு அறிந்திருக்கின்றன. நான் எங்காவது பறந்து சென்றால் என்னைத் தொடர்ந்து எத்தனை பறவைகள் அடிமைகளைப்போல் வருகின்றன!

கொன்று தின்ன வேண்டியிருக்கிறது. அப்படி இயற்கை எங்களைப் படைத்து விட்டது. நீ என்னிடம் முறையிட்டுக் கொண்டதுபோல், கொடுமைக்காரனாகிய உன் முதலாளியிடம் போய் முறையிடு. ஓநாய் எப்போதாவது தான் ஆட்டைக் கொன்று தின்கிறது. ஆனால் மனிதர்களோ, ஆயிரக்கணக்கில் ஆடுகளை விழுங்குகிறார்கள். பகிரங்கமான எதிரி ஆபத்தானவனாக இருக்கலாம்; ஆனால் வேஷதாரியான நண்பன் அதைவிட ஆபத்தானவன்.''



செய்யத் தொடங்க வேண்டிய கட்டத்தை அடைந்தனர். யார் யாருக்கு எந்த எந்த வேலை ஏற்றது என்பதைத் தெரிவிக்கும்படி ஆந்தை வாத்தியாரிடம் கேட்டார்கள். ஆந்தையும் அவ்வாறே செய்ய முன் வந்தது.

''ஆயுதம் தாங்கிப் படை வீரனாகப் பணியை செய்வது அன்னத்துக்கு மிகவும் பொருத்தமான ஒரு வேலை'' என்றது ஆந்தை.

''சேவல் கடல்தாண்டிச் சென்று திரவியம் தேடவேண்டும். சிலந்தி ராஜ சபையில் வேலைசெய்வது பொருத்தம். கழுதைக்குச் சங்கீதமே தொழிலாக அமையத் தக்கது. அதில் அதன் திறமை நன்கு பிரகாசிக்கும்'' என்று ஆந்தை கூறியது.

இதையெல்லாம் காது கொடுத்துக் கேட்ட ஒரு குடியானவன், ஆந்தை வாத்தியாரைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னான்: ''ஏ முட்டாளே! நீயும் பெற்றோர்களைப்போல் நடந்து கொள்கிறாயே! நான் ஏன் இப்படிச் சொல்கிறேன் தெரியுமா? பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் மனப் போக்குகளைக் கவனிக்கவே மாட்டார்கள். இந்த மகன் பெரியவன் ஆனபிறகு இந்த வேலை செய்ய வேண்டும், அந்த மகன் பெரியவன் ஆனபிறகு அந்த வேலை செய்ய வேண்டும் என்று அவர்கள் சிறு குழந்தைகளாக இருக்கும்போதே தீர்மானம் பண்ணி விடுவார்கள். நீயும் அவர்களைப் போலவே, ஒவ்வொருவனுடைய இயல்பையும் கவனிக்காமல் முடிவு செய்கிறாய். கவனித்திருந்தால் அன்னத்துக்குக் கடல் தாண்டும் மாலுமி வேலையும், சேவலுக்குச் சிப்பாய் வேலையும், சிலந்திக்கு நெசவாளி வேலையும் கற்பித்திருப்பாய். கழுதையோ எதற்கும் லாயக்கில்லாத ஒரு மூடப் பிராணி.''

என்னை மகாமேதாவி என்று அவை ஒப்புக்கொள்கின்றன.''

இதைக் கேட்ட குடியானவன் சொன்னான்: ''மூளை கெட்ட ஆந்தையே! கர்ண கடூரமாக அலறும் நீ, இனிய கீதங்களைப் பாடும் பறவைகளையா பழிக்கிறாய்? உன்னைத் தொடர்ந்து அடிமைகள்போல் பறந்து வரும் பறவைகளைப் பார்த்துவிட்டு நீ உன்னைப் பற்றிப் பெரிய எண்ணம் கொண்டுவிடாதே. விவேகிகளை வெகுசிலரே பின் தொடருவார்கள். மூடர்களையோ ஏராளமான மூடர்கள் பின் தொடருவார்கள்.''



நிலா சிரித்தது

எம்.சியாமளா



5. பொறுமை

தோட்டக்காரன் கபாலி கேட்டை திறந்து விட்டான். கார் உள்ளே புகுந்து நின்றது. வாசீசனும் பானுவும் இறங்கினார்கள். அவர் பானுவை அழைத்துக் கொண்டு நடந்தார். பானு நாலாபுறமும் பார்த்தாள். பிறகு படபடக்கும் இதயத்தோடு மாமாவைத் தொடர்ந்து வராந்தாவைக் கடந்து உள்ளே புகுந்தாள். அதே சமயம் எதிர்ப்புறமிருந்து வந்துகொண்டிருந்தவளை நோக்கி மாமா, ''சொர்ணா! பானுவை அழைத்து வந்து விட்டேன்...'' என்று கூறிவிட்டு சோபாவில் சாய்ந்தார்.

பானு சொர்ணாவை பார்த்துக் கொண்டே தயங்கி நின்றாள். ''வா... அம்மா... பானு... இது... உன் வீடு மாதிரி வாம்மா...'' அன்பாக அழைத்து பானுவின் கன்னத்தைத் தடவிக் கொடுத்தாள். பிறகு ''பொன்னி!...'' என்று குரல் கொடுத்தாள். ''இதோ... வர்ரேன்...ம்மா..'' என்றவாறு ஒரு இளம்பெண் வேகமாக வந்தாள். அப்போது டிரைவரும் கபாலியுமாக காரிலிருந்த சமான்களை ஹாலில் கொண்டு வந்து வைத்தனர். ''பொன்னி! குழந்தையோட சாமான்களை மாடியிலே இந்துவோட ரூமுக்கு எதிராக இருக்கிற ரூமில் கொண்டு வை...'' என்று கூறிவிட்டு பானுவுடன் மற்றொரு சோபாவில் அமர்ந்து கொண்டாள். கணவனின் முகத்தில் சூழ்ந்திருந்த சோகத்தைக் கண்டு விஷயத்தை ஊகித்துக் கொண்டவளாக, ''என்னங்க... கடைசி நேரத்தில் உங்களை உங்க தங்கை பார்த்தாங்களா... பேசினாங்களா...'' என வினவினாள்.

''நான் கரெக்ட் டயத்துக்குப் போய் சேர்ந்துட்டேன். என்னைப் பார்த்துப் பேசி, இந்தக் குழந்தையை என்கையில் ஒப்படைத்துவிட்டுப் போய்விட்டாள்.'' கலங்கிய குரலில் சொன்னவர், ''எங்கே இந்து கார்த்திக்?'' என்று கேட்டார்.

''அதோ வருகிறார்களே'' என்று மாடிப்படியை சுட்டிக் காட்டினாள். ''அம்மா'' என்று ஓடிவந்த கார்த்திக் அன்னையிடம் வந்து ஓரக்கண்ணால் பானுவைப் பார்த்தான். அவன் கண்களில் ஆர்வம், முகத்தில் வெட்கம். பானுவும் ஆசைபொங்க கார்த்திக்கை நோக்கினாள். லேசாகச் சிரித்தாள். அவனோ நாணச் சிரிப்புடன் தாயின் மடியில் தலையை கவிழ்த்துக் கொண்டான். பானு ஆவலுடன் மாடிப்படியை நோக்கினாள். இந்து அங்கேயே நின்று கொண்டிருந்தாள்.

''இந்து!... இங்கே... வா... இவள் தான் பானு... அடுத்த வாரத்திலிருந்து இவளும் உன்னுடன் ஸ்கூலுக்கு வருவாள். உன் வகுப்பு தான் படிக்கிறாள்.'' என்றார் வாசீசன். இந்து ஒருமுறை பானுவை ஏற இறங்கப் பார்த்தாள்.

பானு ஏமாற்றம் அடைந்தாள். அவள் எத்தனை எதிர்பார்த்தாள். ஆனால் ஏமாற்றம்தான். அதேசமயம் சொர்ணம் எழுந்தாள். ''நீங்க ஸ்னானம் செய்துவிட்டு வாருங்கள்... குழந்தைகள் பேசிக் கொண்டிருப்பார்கள்... நான் போய்... உள்ளே வேலையைக் கவனிக்கிறேன்...'' என்றவள் ''பானு! இந்துவோட பேசிக்கிட்டிரு. அப்புறம் குளிக்கப் போகலாம்...'' என்று சென்று விட்டாள். வாசீசனும் பின்புறம் சென்றார்.

அந்த அறையில் பானு தனியாக அமர்ந்திருந்தாள். பெற்றோர் சென்ற

பின்னர் இந்து முகத்தை நொடித்தாற்போல திருப்பிக் கொண்டு மாடிக்குச் சென்று விட்டாள். கார்த்திக் மாடிக்கு போகவும் மனமில்லாமல் பானுவை நெருங்கவும் தைரியமில்லாமல் கதவருகே போய்நின்று கொண்டான். பானு அவனைப் பார்த்தாலும் எண்ணமெல்லாம் இந்துவையே சூழ்ந்து நின்றது.

இந்து என்றால் நிலா என்று அர்த்தம். அம்மா சொல்லியிருக்கிறாள். இந்து நிலாவைப்போல இதமாக இருப்பாள் என நினைத்தாளே. அவள் கற்பனை இடிந்தது. இந்து அழகாகத்தான் இருக்கிறாள். சந்தன நிறம். ஒடிசலாகக் கொடி போல இருக்கிறாள். நீண்ட முகம், தீர்க்கமான மூக்கு. முகம் லக்ஷணமாக பானுவுக்குப் பிடித்தமாதிரி இருக்கிறாள். கிராமத்துத் தோழி பங்கஜாவைப் போல இருக்கிறாள். ஆனால் ஆசையாக அவளிடம் வரவில்லை. பேசவில்லை. முகத்தைச் சுளித்துக் கொண்டு போய் விட்டாளே. சொர்ணம் மாமி நல்லவளாகத்தான் இருக்கிறாள். ஆனால் அவளோடுகூட விளையாட முடியுமா. சிரித்துச் சிரித்து எதையாவது பேசி மகிழ முடியுமா? பானுவுக்கு முதன் முறையாக நெஞ்சில் வேதனை மூண்டது. ''பானு ! எதையும் தாங்கும் இதயம் வேண்டும்...பிறர் உன்னை வெறுத்தாலும் நீ அன்பாக இருக்க வேண்டும்...'' அருமை அப்பாவின் உபதேசம் அவளுக்கு இந்த நேரத்துக்கு மிகவும் இதமாக, ரணத்தில் தடவும் மருந்து போல நினைவுக்கு வந்தது. அடுத்த விநாடியே பானு துயரத்தை விழுங்கி விட்டாள்.

அவள் பார்வை கார்த்திக்கிடம் சென்றது. ''வா...கார்த்தி...வா...! என் கிட்டே வா... உனக்குப் பொம்மை தரட்டுமா...?'' என்று இரு கைகளையும் நீட்டி அழைத்தாள். கார்த்திக் மெதுவாக அடிமேல்அடி வைத்து பானுவை நெருங்கி வந்தான். பானு தன் தளிர்க் கரங்களால் அந்த மலர் கொத்தாக நின்ற சிறுவனை இழுத்து அணைத்து முத்தமிட்டாள். ''கார்த்தி. பானு அக்காக்கு முத்தா... கொடுப்பியா...''

''ஓ...'' என்று செவ்விதழ்களைப் பானுவின் கன்னத்தில் பதித்தான் கார்த்திக்.

''சமர்த்துக்குட்டி, சக்கரைகட்டி..'' என்று ஆசையுடன் கொஞ்சினாள் பானு. அவளுடைய இதய தாபமெல்லாம் கரைந்தது. மனதில் மகிழ்ச்சி புரண்டது. தனக்குத் தம்பி தங்கையில்லையே என்ற குறை கார்த்திக்கை அணைத்து மகிழ்ந்ததும் பறந்து விட்டது.

''கார்த்தி! என்னோட சாமானெல்லாம் எங்கேயிருக்குதுன்னு உனக்குத் தெரியுமா...?''

''ஓ.. தெரியுமே... இங்கேவா...'' என்று மாடியில் பானுவை ஓர் அறைக்குள் அழைத்துச் சென்றான். அதே சமயம் எதிர் அறையிலிருந்து புத்தகப் பையுடன் வெளியே வந்தாள் இந்து. பச்சை ஸ்கர்ட்டும் வெள்ளை ப்ளௌஸும் அணிந்து காலில் வெள்ளை சாக்ஸும் ஷூவும் அணிந்து இரட்டைப் பின்னலில் பச்சை ரிப்பனும் வைத்திருந்தாள். இருவரின் பார்வையும் ஒருகணம்



சரியான கேள்வி

சென்ற இதழ் கோகுலத்தில் 'கோர்டுகளுக்கு ஒரு புத்தகம்' பற்றிய ''கட்டுரையில் நான்காவது கேள்வி ''மிக அதிக காலம் ஜெயில் தண்டனை அனுபவித்த குற்றவாளி யார்?'' என்ற கேள்விக்கு இரண்டு இத்தாலிய மோசடிக் குற்றவாளிகளுக்கு 7109 ஆண்டுகள் தண்டனை வழங்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். கேள்வியில் 'அனுபவித்த குற்றவாளி' என்று இருக்கிறதே, அவர்கள் 7109 ஆண்டுகளை தண்டனை அனுபவித்தார்களா என்ன? — லக்ஷ்மி

நெல்லிக்குப்பம்

(தண்டனை வழங்கியதோடு சரி-அனுபவிக்க இந்த ஒரு பிறவி போதாதே!)

மோதியது. இந்து வேகமாக மாடியிலிருந்து இறங்கலானாள்.

உள்ளே நுழைந்த பானு ஒரு கூடையிலிருந்த தன் தோழி வனஜா கொடுத்த அழகான பொம்மையை எடுத்துக் கார்த்திக்கிடம் கொடுத்தாள். சிறுவனின் கருவிழிகள் அகன்றன.

''இது எனக்கே எனக்கா......?''

''ஆமா..ம்... உனக்கே உனக்குத்தான்... கார்த்தி!'' என்றாள். பிறகு நாம்ப வீடு பூரா சுற்றிப் பார்க்கலாம்...'' என்றுசிறுவனுடன் ஹாலுக்கு வந்தாள். ஹால் பெரிதாக இருந்தது. நடுவில் ஊஞ்சல். வழவழப்பான தேக்கு மரப்பலகை. வாசற்புறம் பார்த்தாற்போல இந்துவின் அறை. கொல்லைத் தோட்டத்தைப் பார்க்கிறாற்போல பானுவின் அறை.

தரை முழுவதுமே சிவப்பு மொசைக் தளம். டிஸ்டெம்பர் பூசிய சுவர். ஒரு பக்கம் திறந்த மாடி. அதற்கும் ஹாலுக்கும் நடுவே கதவு இருந்தது. சுவரில் அழகான காலண்டர்கள், எல்லாவற்றையும் பார்த்த பானு சந்தோஷத்துடன் இறங்கி வந்தாள். ''பானு, கார்த்தி!... டிபன் சாப்பிட வாங்க...'' என்று சொர்ணத்தின் குரல் கேட்டது. வாசல் ஹாலுக்கு அடுத்தது டைனிங் ஹால். நீண்ட மேஜை, சுற்றி நாற்காலிகள். இந்து அங்கு டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

''மாமீ! நான் தாம்பரத்தில் டிபன் சாப்பிட்டுவிட்டேன். இப்ப பசிக்கலே. வேண்டாம் மாமி...'' என்றாள் பானு.

''சரி, இந்தா சூடா போர்ன்விடா குடி. . அப்புறம். குளித்துவிட்டு உன்னுடை துணிகளையும் பொன்னியிடம் துவைக்கப் போடம்மா... ஏய்! கார்த்தி! நீ வா. டிபன் எடுத்துக்க... உனக்கு மருந்து தரணும்...'' என்று கூறிவிட்டுச் சொர்ணம் போய்விட்டாள்.

அன்று முழுதும் தோட்டத்தைச் சுற்றிப் பார்ப்பதும், கார்த்திக்கோடு விளையாடுவதுமாக பானு பொழுதை கழித்தாள். இடை இடையே இந்துவின் பராமுகம் நினைவில் வந்து முள்ளாகத் தைத்தது. மாமா ஆபீஸுக்குப் போய்விட்டார். மாமி எங்கோ வெளியில் போய் விட்டுப் பகலில்தான் வந்தாள். சுந்தரி சமையல் அறையில் வேலை செய்து கொண்டிருந்தாள். பொன்னி வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டு தோட்டத்தில் அவர்களுக்காகக் கட்டப்பட்டிருந்த குடிசைக்குப் போய் விட்டாள்.

பகல் சாப்பாட்டிற்குப் பிறகு பானு தன் அறையில் சாமான்களை ஒழுங்கு படுத்தினாள். பிறகு சிறிது நேரம் படுத்தாள். இளம்மனம் எதை எதையோ எண்ணித் தன் எதிர்காலச் சிந்தனையில் ஆழ்ந்தது. மாமி சொர்ணம் அழகும் நவநாகரிகமும் படிப்பும் உள்ளவள். அந்த வீட்டில் யாருமே அதிகமாகப் பேசுவதில்லை. அவரவர் காரியங்களைப் பார்க்கிறார்கள். சாப்பிடும்போது மாமாவும் மாமியும் பேசுகிறார்கள். சமையல் அறையில் சுந்தரி மெல்லிய குரலில் பாடியபடி சமைக்கிறாள். பொன்னியும் கபாலியும்தான் தோட்டத்தில் வளவளவென்று பேசிக் கொண்டே வேலை செய்கிறார்கள்.

இந்து ஏன் இப்படி இருக்கிறாள்..? சின்னப் பெண்கள் கலகலப்பாகப் பேசிச் சிரித்து விளையாடமாட்டார்களா? அவளை ஏன் அலட்சியமாகப் பார்க்கிறாள்? வெட்கமாக இருக்குமோ...? இல்லை...இல்லை...வெட்கப் பட்டால் முகத்தில் சிரிப்பும் ஆர்வமும் இருக்காதோ?... அவள் இந்துவைப் போலப் பணக்காரி இல்லை என்ற எண்ணமோ? அவளுக்கும் கிராமத்தில் வீடு இருக்கிறது. அப்பா ஏதோ கொஞ்சம் பேங்கிலும் பணம் வைத்திருக்கிறார்.

என்ன இருந்தாலும் யாருமில்லாத அனாதைதானே? இந்துவின் வீட்டில் ஒண்ட வந்திருப்பவள்தானே? அதனால்தான் அவளை அலட்சியமாக நினைக்கிறாளோ.....? பானுவுக்குத் துக்கம் பொங்கி வந்தது. அம்மா அப்பாவை நினைத்துக் கொண்டாள். அப்பாவின் புத்திமதிகள் நினைவுக்கு வந்தன. மனதைத் திடப்படுத்திக் கொண்டாள். ''மாமா, மாமி நல்லவர்கள்.... கார்த்திக் இருக்கிறானே... அவன்

ஒருவன் போதுமே...'' அவள் நினைத்த சமயம்...

''பானுக்கா.. தூங்கறியா.. ?'' குரல் அருகில் கேட்டது. சட்டென்று விழித்துப் பார்த்தாள். சிரிப்புடன் எழுந்தாள்.

பள்ளியிலிருந்து திரும்பி வந்த இந்து நேரே மாடிக்குச் சென்று விட்டாள். அப்போது இரண்டு பெண்கள் இந்துவை அழைத்தபடி தோட்டத்திற்கு வந்தார்கள். கார்த்திக் அவர்களிடம் ஓடினான். ''கலா, ப்ரீதா...! இதோ எங்க பானு...'' என்று கூறியபடி அவர்களை பானுவிடம் அழைத்து வந்தான். ''பானுக்கா, இவா இந்துக்காவோட படிக்கிறாங்க..'' என்றான். மூவரும் பார்த்துக் கொண்டனர். சிரித்துக் கொண்டனர். ''நீ.. கூட எங்க ஸ்கூல்லே சேரப் போறியா?...'' என்று மெதுவாக வினவியபடி அந்தப் புல்வெளியில் அமர்ந்தாள் ப்ரீதா. கலாவும் பானுவின் அருகில் அமர்ந்தாள். 'இவர்கள் இந்துவைப் போல இல்லாமல் சகஜமாகப் பேசுகிறார்கள்' என்று பானு மகிழ்ச்சியுடன், ''ஆமாம்...'' என்றாள்.

''ப்ரீதா! அந்தக் கணக்கை மத்தியானம் நானும் இந்துவும் போட்டுப் பார்த்தோம்டீ. சரியாவே வரலே...'' என்ற கலா தன் பையிலிருந்து நோட்டை எடுத்தாள்.

''எனக்குக்கூடத் தெரியலே... டீ.. கலா...'' என்றாள் ப்ரீதா.

பானுவின் மனம் குறுகுறுத்தது.

''என்ன கணக்கு... அது... காட்டு பார்க்கலாம்... நான் போட்டுப் பார்க்கட்டுமா...?'' என்றாள் பானு. ப்ரீதா கணக்குப் புத்தகத்தை எடுத்துக் காட்டினாள். ஆவலுடன் அதை வாங்கி ஒன்றிரண்டு முறை படித்துப் பார்த்த பிறகு ஒரு பேப்பரில் யோசித்தபடி கணக்கைப் போட்டாள் பானு. அதைப் பார்த்துக் கொண்டிருந்த ப்ரீதா, ''டீ.... கலா, சரியா போட்டு விட்டாள்... இதே விடை தான்... நான்... இதை இங்கே மைனஸ் பண்ணி விட்டேன்.. அதனால் தான் சரியா வரலே...'' என்று கூவினாள். மூவரின் முகத்திலும் குதூகலம். மேலும் இரண்டு கணக்குகளைக் காட்டினாள் கலா. பானுவும் யோசித்துச் சரியாகப் போட்டாள். அப்போது ஸ்கூல் டிரஸ்ஸை அவிழ்த்து விட்டு நீலநிற ஃப்ராக் அணிந்து முகம் கழுவி அலங்கரித்து கொண்டுவந்த

> **ஆருயிரம் மைல் வித்தியாசம்**
>
> 18-6-78 கோகுலம் இதழில் தெரியுமா தெரியுமே பகுதியில் ஒளியின் வேகம் என்ற கேள்விக்கான விடையில் நிமிஷத்துக்கு 1,86,000 மைல்கள் என்று இருக்க வேண்டும். அதுதான் சரி.
>
> டி.ஆர். சிவராமகிருஷ்ணன் M.sc, MASI
> இந்திய வானியல் ஆராய்ச்சி நிலையம்,
> பம்பாய்

இந்துவிடம் ப்ரீதா மகிழ்ச்சி பொங்க, ''அடியே. உங்க பானு கெட்டிக்காரியா இருக்காள். இதோ, பாரேன். இந்தக் கணக்கு கரெக்டா வந்திருக்கு... இதோ. இதுகூட...'' என்று நோட்டைக் காட்டினாள். இந்து இதழ்களைக் கடித்துக் கொண்டாள்.

''என்னடீ பிரமாதம். கொஞ்சம் கவனமாப் பார்த்துப் போட்டால் நான் கூடச் சரியாக போட்டிருப்பேன்... சரி சரி. வாங்கடி விளையாடலாம்...'' என்று கையில் பந்தைத் தூக்கிப் போட்டபடி ஓடினாள். பானுவின் முகம் தொங்கியது. ப்ரீதா அதைக் கவனித்து அனுதாபத்தோடு பார்த்தாள். லேசாக முணுமுணுத்தாள். ''இந்துவுக்கு எப்பவுமே அவளைவிட வேறு யாரும் உசத்தியா இருக்கக் கூடாது...கெட்டிக்காரியாக... அழகாக இருந்தால் அவள் பொறுக்க மாட்டாள். தானே தான் உசத்தியாக இருக்கணும்...'' என்றவள் ''நீயும் வரியா விளையாட'' என்று பானுவை அழைத்தாள். ''நான் கார்த்திக்கோடு விளையாடறேன். அப்புறம் நாளைக்கு உங்களோட விளையாட வரேன்...'' என்றாள் பானு தயக்கத்துடன். இந்து அவளை அழைக்காததால் தயங்கினாள்.

இந்துவை பானு கொஞ்சம் புரிந்து கொண்டாள். ப்ரீதாவின் சொற்களை நினைத்துப் பார்த்தாள். பானுவும் இந்துவைப் போல அழகாக இருப்பது கெட்டிக்காரியாக இருப்பது அவளுக்குப் பிடிக்கவில்லை. அன்றுகாலே பானு குளித்துக் கொண்டிருக்கும்போது பொன்னி கபாலியிடம் சொல்லிக் கொண்டிருந்ததன் அர்த்தம் இப்போது விளங்கியது. ''நம்ப இந்து நினேச்சுகிட்டிருந்தது... கிராமத்திலேருந்து வர பொண்ணு அசிங்கமா அசடா இருக்கும்னு. பா..வம் ஏமாந்து போச்சு...'' என்று பொன்னி சொன்னாள். இந்துவுக்குப் பானு அழகாக, படிப்பிலும் கெட்டிக்காரியாக இருப்பது பொறாமையோ... அதற்கு பானு என்ன செய்ய முடியும்? (தொடரும்)

மர்ம மாளிகையில் பலே பாலு —10—

கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்




ரவி அந்த ஆயுதச்சாலையை நோட்டம் விட்ட பிறகு வெள்ளை யர்களால் உருவாக்கி இருந்த கணப்புக்கு அருகே போய் நின்றான்.
திடீரென்று ஏனோ எனக்குக் குளிருகிறது.
கணப்பின் தீ ஜுவாலையின் நடுவே திடீரென்று ஒரு முகம்...
தகதகக்கும் கங்குகளுக்கு நடுவே இதென்ன இப்படி?
சின்ன எஜமான்... கதகதப்புப் போதவில்லை யானால் அந்தக் கணப்பில் இன்னொரு துண்டு விறகைத் தூக்கிப் போடுங்கள்
மர்மத்திலும் மர்மம்... நெருப்பின் நடுவே மனித முகமா? வியப்பாகவல்லவா இருக்கிறது.
புதிய மரத்துண்டைக் கணப்பிலிட்ட மறுவினாடி...
ஓ... ஆஹ்... ஹ்... உதவி... ஐயோ! உதவி...
குபுகுபுவென்று பொங்கிய புகைப் படலம் ரவியைத் திக்குமுக்காட வைத்துத் திணறலையும் இருமலையும் உண்டாக்கிக் கண்களை மூடச் செய்கிறது. அதே சமயம் தடுமாறிச் சரிந்தவன் கணப்பினுள் மயங்கி விழுகிறான்.
ஆ... ஐயோ...!

தொடரும்

வாயில்லா ஜீவன்

''வேலு... அவசரமா நாங்க கடலூர் போக வேண்டியிருக்கு... 'ஆனந்த பவனி'ல் சொல்லி உனக்கு மதிய உணவு அனுப்பச் சொல்கிறோம். கன்றுக்குட்டி கீற்றுக் கொட்டகையில் இருக்கு. அதுக்குப் பக்கத்து வீட்டிலே கஞ்சி கேட்டு வாங்கிச் சட்டியிலே ஊற்றிவை. திண்ணையிலே புதுப் புல் இருக்கு, அதையும் எடுத்துப் போடு; வீட்டைப் பத்திரமாகப் பார்த்துக் கொள். நாங்கள் சாயங்காலமாய் வந்து விடுகிறோம்'' என்று சொல்லி விட்டு அம்மாவும் அப்பாவும் புறப் பட்டுப் போய்விட்டார்கள்.

அவர்கள் புறப்பட்டுப்போன சற்று நேரத்துக்கெல்லாம் வேலுவுடைய நண்பன் பாலு வந்தான். பாலுவோடு கண்ணன், மணியன், ரமேஷ் ஆகியோரும் வந்தனர். அவர்களைப் பார்த்ததும் வேலுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

''இன்றைக்கு என்ன விளையாட்டு விளையாடலாம்..?'' என்று கேட்டான் வேலு.

''கோலிக்குண்டு விளையாடலாம்; கண்ணாமூச்சி ஆட்டம் ஆடலாம்; 'கேரம்' ஆடலாம்; பந்து விளையாடலாம்'' என்று சொன்னார்கள் அவன் நண்பர்கள்.

வந்த நண்பர்களுக்கு ஏதாவது கொடுக்க நினைத்தான் வேலு. வீட்டில் 'பிஸ்கட்' இருந்தது. அதை எடுத்து வந்து அவர்களுக்குக் கொடுத்தான்; அவனும் எடுத்துக் கொண்டான். அதற்குப் பின் அவர்கள் எல்லோரும் தண்ணீர் கேட்டார்கள்; கொண்டு வந்து கொடுத்தான்.

வேலு வீட்டுத் தோட்டத்தில் நிழல் மிகுந்த இடமாகப் பார்த்துப் போய் விளையாட்டைத் தொடங்கினார்கள்.

வேலுவுக்கு விடுமுறைநாள் என்றால் மிகவும் பிடிக்கும். நண்பர்கள் கூட்டமும் வந்து சேர்ந்து கொண்டால் அவன் மகிழ்ச்சிக்கு எல்லையே இருக்காது.

'கண்டிப்பதற்கு அம்மாவும் இல்லை. அப்பாவும் இல்லை. இன்று நம் மனம் போல் விளையாடலாம்' என்று எண்ணினான் வேலு.

நேரம் வேகமாகப் பறந்தது. வேலு விளையாட்டிலேயே கவனமாக இருந்தான்.

''வேலு... வேலு...'' என்று சிறுமி ஒருத்தி அவனைக் கூப்பிட்டாள். விளையாட்டு மும்முரத்தில் அவன் இருந்ததால் அவனுடைய காதில் அது விழவில்லை. தெருவில் சைக்கிள் மணி கேட்டது. அவன் வீட்டுக்கு அருகில் ஒலித்ததும் அவன் போய் யாரென்று பார்க்கவில்லை.



''அம்மா!'' என்று கத்திக் கொண்டிருந்தது கன்றுக்குட்டி.

சின்னஞ் சிறிய கன்று அது. சிவப்பு நிறம்; அதில் வெள்ளை நிறத்தில் திட்டுக்கள். பார்க்க மிகவும் அழகாக இருந்தது அந்தக் கன்று. பசி எடுத்ததால் தாய்ப் பசுவின் நினைவு வந்து அது அப்படிக் கத்தியது.

''டேய் வேலு, கன்றுக்குட்டி கத்துதுடா...'' என்றான் கண்ணன்.

''அது அப்படித்தான்டா சுத்தும். நீ கவலைப்படாதே.. ஆட்டத்தை ஒழுங்காக ஆடு..'' என்றான் வேலு.

எல்லோரும் மும்முரமாக விளையாடிக் கொண்டிருந்தார்கள். நிழல் நகர நகர அவர்களும் விளையாடும் இடத்தை மாற்றிக் கொண்டு இருந்தார்கள்.

''வேலு எனக்குப் பசி வந்திடுச்சு... நான் சாப்பிடப் போறேன்டா...'' என்றான் பாலு. சொல்லிவிட்டு வேலுவின் பதிலுக்காகக் கூடக் காத்திராமல் புறப்பட்டும் விட்டான். பாலுவுடன் வந்த மற்றவர்களும் புறப்பட்டு விட்டார்கள்.


''சாப்பிட்டுட்டு வருவியா...?'' என்றான் வேலு. ''வெயில் வந்திடுச்சு, வீட்டிலேயே இருந்திடலாம்னு பார்க்கிறேன்'' என்றான் பாலு.

''சரி உன் இஷ்டம்'' என்று சொல்லி அவனை அனுப்பினான் வேலு.

சாப்பாட்டை நினைவுபடுத்தி எல்லோரும் புறப்பட்டதால் வேலுவுக்கும் பசி வந்துவிட்டது; கொஞ்ச நேரத்தில் வயிற்றைக் கிள்ளியது.

''அம்மா!'' என்று கன்றுக் குட்டி இன்னும் கத்திக் கொண்டிருந்தது.

''எனக்குப் பசி வயிற்றைக் கிள்ளுது. இதில் உன்னுடைய சத்தம் வேறு'' என்று அலுத்துக் கொண்டான் வேலு.





வாசல் பக்கம் சைக்கிள் மணி ஒலியும் அதைத் தொடர்ந்து 'வேலு..வேலு' என்று யாரோ கூப்பிடும் குரலும் கேட்டன. அவன் அம்மா காலையில் சொல்லிவிட்டுப் போனதைச் சுத்தமாக மறந்துவிட்டான். தனக்கு உணவு வரும் என்பதையும், கன்றுக் குட்டிக்குக் கஞ்சி வைக்கச் சொன்னதையும், விளையாட்டு நினைவில் இருந்ததால் அறவே மறந்து விட்டான் அவன்.

'இந்த அம்மா சுத்த மோசம்.. சாப்பிடுவதற்கு ஒன்றும் செய்து வைக்காமல போய் விட்டாளே..' என்று கோபத்தோடு தனக்குத் தானே பேசினான்.

சைக்கிள் மணி தொடர்ந்து ஒலித்ததால் பசியைப் பொருட்படுத்தாது எழுந்து போனான். வாசலில் ஆனந்த பவனத்தைச் சேர்ந்த ஆள் கையில் உணவுப் பொட்டலத்துடன் நின்றான்.

''வேலு...! இப்போதுதான் உன் காதில் விழுந்ததா... முன்பே ஒரு தடவை வந்து பார்த்துக் கதவு மூடியிருந்ததால் திரும்பிவிட்டேன். இந்தா, சாப்பாட்டுப் பொட்டலம்.. இதிலே தயிர் சாதம், வடை எல்லாம் இருக்கு; சாப்பிடு.. நான் வரட்டுமா..?'' என்று சொல்லிவிட்டு அவன் போய்விட்டான்.

''அம்மா!'' என்று கத்தியது கன்றுக்குட்டி.. அம்மா சொன்னது முழுவதும் நினைவுக்கு வந்து விட்டது, வேலுக்கு. அவனுக்கு வந்த உணவுப் பொட்டலத்தை அப்படியே திண்ணை



பளபளக்கும் பல்வரிசைத் தெரியுதே!
கலகலக்கும் நகையொலியும் கேட்குதே!
ஜிலுஜிலுக்கும் அமெரிக்க நாட்டிலே
மினுமினுக்கும் மீனுக்குட்டி யாரிவள்?

யில் வைத்துவிட்டுப் பக்கத்து வீட்டுக்குப் போனான் வேலு.

"வேலுவா.. வா தம்பி.. தோட்டத்துப் பக்கமிருந்து நளினி ரொம்ப நேரமா உன்னைக் கூப்பிட்டா.. நீ வந்து கஞ்சியை எடுத்துக்கிட்டுப் போகலே.. வாசல் வழியையும் அடைச்சிட்டே போயிருக்கு.." என்றாள் பக்கத்து வீட்டு அம்மாள்.

"அம்மா... விளையாட்டிலேயே கவனமாக இருந்திட்டேன். கஞ்சியைக் குடுங்க.. இப்ப கொண்டு போயி வைக்கிறேன்" என்றான் வேலு.

"நளினி! அந்தப் பானையிலே இருக்கிற கஞ்சியை எடுத்து வேலு கிட்ட கொடும்மா.." என்றாள் அவள்.

கஞ்சியைக் கொண்டு போய்க் கன்றுக் குட்டியிடம் வைத்தான். திண்ணையிலிருந்த புல்லில் கொஞ்சம் எடுத்து வந்து போட்டான். வெகு நேரம் பசியால் துடித்த கன்றுக் குட்டி ஆவலோடு கஞ்சியைக் குடித்தது; புல்லைத் தின்றது.

இப்போதுதான் வேலுக்கு மனம் நிறைவாக இருந்தது.

'நமக்குப் பசித்தால் ஹோட்டலுக்குப் போய்ச் சாப்பிடலாம்; கேட்டு வாங்கிக் கொள்ளலாம். அது என்ன செய்யும்? பாவம், கட்டுத் தறியிலேயே பசியோடு கிடக்க வேண்டியதுதான். 'அம்மா.. அம்மா..' என்று அது கத்தியதைக் காதில் வாங்காமல்— அதன் துன்பத்தை உணராமல் விளையாடிக் கொண்டு இருந்துவிட்டேனே.. பசி வந்தவுடனேயே அந்தப் பசிக் கொடுமையில் அம்மாவை எப்படியெல்லாம் பேசிவிட்டேன்! கன்றுக் குட்டி பசியினால் எவ்வளவு அவதிப் பட்டிருக்கும்!' என்று நினைந்து வருந்தினான் வேலு.

கன்றுக் குட்டியை அன்போடு தடவிக் கொடுத்தான். அது நாக்கை நீட்டி அவனுடைய கையை அன்போடு நக்கியது. கன்றுக் குட்டியின் பசி நீங்கிவிட்டது என்பதை உணர்ந்தான் வேலு.

கன்றுக்குட்டியைத் தட்டிக் கொடுத்துவிட்டு மறுபடியும் திண்ணைக்கு வந்தான். திண்ணையில் அவன் வைத்து விட்டுப் போன உணவுப் பொட்டலத்தைப் பார்த்தான்; காணவில்லை; பசி வயிற்றைக் குடைந்து கொண்டிருந்தது.

தெருவுக்கு வந்து பார்த்தான். ஒரு பிச்சைக்காரன் தூரத்தில் ஒரு மர நிழலில் உட்கார்ந்து அந்தப் பொட்டலத்தைப் பிரித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

வேலு அதற்காக வருந்தவில்லை. அம்மா அவ்வளவு தூரம் சொல்லி விட்டுப் போயும்கூடக் கன்றுக் குட்டியைப் பட்டினி போட்டதற்காகத் தனக்குத் தகுந்த தண்டனை கிடைத்து விட்டது என்று நினைத்தான் அவன்.

"அந்தப் பிச்சைக்காரன் அதைக் கேட்டு வாங்கிப் போயிருக்கலாமே? இப்படிச் செய்து விட்டானே." என்று நினைத்து அவனுடைய செயலுக்காக வருத்தப்பட்டான் வேலு.

தெருவில் ஒரு பெரியவர் வந்து கொண்டிருந்தார்.

"வேலு என்ன அவனையே பார்த்துக்கிட்டு நிக்கறே... அவன் ஒரு பைத்தியம்.. கவனமா இல்லேன்னா. எதையாவது தூக்கிட்டுப் போயிடுவான்" என்றார் அவர்.

'அப்படியென்றால் அவன் மீது வருத்தப்படவும் ஞாயமில்லை; சாப்பிட்டு விட்டுப் போகட்டும்.. நாம் தான் எல்லாவற்றிலும் கவனமாக இருக்க வேண்டும்' என்று எண்ணி மனத்தைச் சமாதானப் படுத்திக் கொண்டான் வேலு.

அன்றுமுதல் இன்று வரை

செய்திப் போக்குவரத்து

.கிருஷ்ணவேணி

இன்று செய்திகளை அனுப்ப எவ்வளவோ வழிகளும் வசதிகளுமிருக்கின்றன. விண்வெளியிலிருந்தும் தகவல்களைப் பெறும் அளவுக்கு இன்று மனிதனின் அறிவும் ஆற்றலும் வளர்ந்திருக்கிறது. கம்யூனிகேஷன் எனப்படும் இந்தத் தகவல் போக்குவரத்து இன்றுள்ள நிலைக்கு எப்படி வளர்ந்தது? காட்டு மிராண்டியாக வாழ்ந்த காலத்தில் மனிதன் செய்திகளை எப்படிப் பரிமாறிக் கொண்டான்?

ஐரோப்பாவிலும் ஆப்பிரிக்காவிலுமுள்ள குகைகளில் ஆதி மனிதன் கற்களைக் கொண்டு கீறி வரைந்த வண்ணச் சித்திரங்கள் காணப்படுகின்றன. இவற்றின் வயது கிறிஸ்து பிறப்பதற்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். இத்தகைய சித்திரங்களைச் கற்கால மனிதன் - குகைவாசியாக வாழ்ந்த காலத்து ஆதிமனிதன்— ஏன் வரைந்தான்? அதீதமான சக்திகளைப் பெறுவதற்காக; ஆற்றலைப் பெறுவதற்காக (மந்திரக் காரியங்களுக்காக) இச்சித்திரங்கள் வரையப் பட்டிருக்கலாம் என்று கருதுகிறார்கள். மான் வேட்டையாடப் போவதை அறிவிக்க, குகைச்சுவரில் ஒரு மான் உருவையும், தான் அதன் மீது அம்பு எய்வது போலவும் வரைந்தான். குகையில் தான் இல்லாதிருப்பதின் காரணத்தைத் தன் கூட்டாளிகளுக்கு அறிவிக்க இத்தகைய படங்களை வரைந்தான். மான் வேட்டைக்குத் தான் மேற்கொண்டுள்ள பாதையைத் தெரிவிக்க மரங்கள், மலை, நதி ஆகியவற்றின் சூழ்நிலை அமைப்பைக் குகை ஓவியங்களில் குறிப்பிட்டான். மனிதனுடைய முதல் செய்திப் போக்குவரத்து இதுதான்.

இன்று இந்தச் செய்திப் போக்குவரத்தில் எத்தனை எத்தனை மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன! இங்கிருந்து அமெரிக்காவிலுள்ளவருடன் டெலிபோனில் பேசலாம். டெலிவிஷனில் பேசுபவரையும் காணலாம்— கேட்கலாம். கம்பியில்லாத தந்தி மூலம் செய்திகள் கண்டம் விட்டுக் கண்டம் பறக்கின்றன. செய்திகளைத் தாங்கிச் செல்ல இன்று விமானம் ரயில், கப்பல் — ஏன் சாடலைட் மூலமாகவும் செய்திகளை அனுப்பலாம், பெறலாம். லட்சக் கணக்கான மைல்களுக்கப்பால் உள்ள இடங்களுக்குத் தகவல்களை அனுப்ப இன்று சில நிமிஷங்களே போதுமானதாக உள்ளது. இந்த அற்புதமான வளர்ச்சி, சாதனை எப்படி ஏற்பட்டது? ஓரே நாளில் திடீரென்று தோன்றவிடவில்லை இது. படிப்படியாகத்தான் இத்தகைய முன்னேற்றம் ஏற்பட்டது. பண்டைக்காலத்தில் செய்திப் போக்குவரத்துக்கு எந்தெந்த முறைகள் பயன்பட்டன என்று தெரியுமா?

அடுத்த பக்கம் புரட்டுங்கள்....





1. குரல்வழி : இவ்வளவு நாகரிகமடைந்த பிறகும் இன்னும் செய்திகளை அனுப்புவதற்கான மிகவும் எளிய முறை மனிதக் குரல்தான். ஆதி மனிதன் செய்திகளை மற்றவனுக்குத் தெரிவிக்க உரக்கக் கத்தி இருக்க வேண்டும். இப்படியே ஒருவனிடமிருந்து மற்றவனுக்குக் குரல் மூலம் கத்திச் சொல்லி மாற்றி மாற்றிச் செய்திகள் அன்று மனிதன் வாழ்ந்த காட்டுப் பகுதிகளில் பரப்பப் பட்டிருக்கும். உயர்ந்த மேடான இடங்களிலோ, மலை முகட்டிலோ நின்று கத்திப் பேசியிருப்பான் ஆதி மனிதன்.




2. முரசு முழங்கும் முறை: குரலைவிட இன்னும் அதிக தூரத்துக்குச் செய்திகளை அனுப்ப முரசு, நகரா, டிரம், போன்ற தோல் கருவிகளைப் பயன் படுத்தினர். அவற்றை அடித்து அதிரச்செய்து அதில் குறிப்பிட்ட சங்கேத ஒலிகளை உண்டாக்கிச் செய்திகளை அறிவித்தனர். இம்முரசொலி முறை சில பழங்குடியினரிடையே இன்றும் புழக்கத்திலுள்ளது. ஆப்பிரிக்காவிலும், உலகின் பல்வேறு பகுதிகளிலும் பெரிய மரங்களைக் குடைந்து உள்ளே 'போலாக்கி' அதில் கழிகளைக் கொண்டு தட்டி அதிர்வுகளை உண்டாக்கி, மாறுபட்ட ஒலிகளைக் கொண்டு செய்திகளை அனுப்புவதுண்டு. இதுவும் முரசு முறைக்குச் சமமே.




3. தீவட்டி முறை: புராதன கிரேக்கர்கள், பாரசீகர்கள், ரோமானியர்கள், கர்த்த ஜீனியர்கள் ஆகியோர் செய்திகளை அனுப்பக் 'காணும்' தந்திமுறை (விஷுவல் டெலிகிராபி) யைக் கையாண்டனர். இது எப்படி? உயர்ந்த இடங்களில், இதற்கென தீவட்டிகளைக் கொளுத்திப் பிரத்தியேகமாக அமைக்கப் பட்ட பகுதியில் ஒவ்வொரு எழுத்துக்கும் ஒவ்வொரு விதமான அசைவுகளை உண்டாக்கிச் செய்திகளை அனுப்பினார்கள். மகா அலெக்சாந்தர் இம்முறையினால் இந்தியாவிலிருந்து தன் தாயகமான கிரேக்க நாட்டுக்கு ஐந்து நாட்களில் செய்திகளை அனுப்பினார். செவ்விந்தியர்கள் புகைமூட்டம் போட்டு அதை மூடித் திறந்து வானத்தில் புகையை மிதக்க விடுவதின் மூலம் செய்திகளை அனுப்பினார்கள்.




4. ரோமானியர்களின் தபால் வண்டி: இன்றையத் தபால் முறையைப் போன்ற ஒன்றை கிறிஸ்து பிறப்பதற்கு ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னே பாரசீகர்கள் கையாண்டார்கள். குதிரைகள் பூட்டிய வண்டி, செய்திகளைத் தாங்கிச் சென்றன. இம்மாதிரியான (குறியர்) குதிரைகள் பூட்டிய வண்டிகள் ரோம சாம்ராஜ்யத்தில் ஒருநாளைக்கு 200 மைல்கள் வரை செய்திகளை எடுத்துச் சென்றன. புறா மூலம் செய்திகளை அனுப்பும் பழக்கமும் இருந்து வந்தது. இம்முறைகள் அநேகமாக எல்லா நாட்டிலுமே கடைப்பிடிக்கப்பட்டன. நம் இதிகாசங்களான பாரதம், ராமாயணம் ஆகியவற்றில் செய்திகளைத் தூதுவர்கள் ரதங்களில் கொண்டுபோனதாகக் கூறப்பட்டிருக்கிறதல்லவா?




5. சீனர்களின் முறை: செய்திகளைத் தாங்கிச் செல்லுவோரைத் தூதர்கள் என்றழைத்தார்கள் ஆசியாவில். 1700ம் ஆண்டு வரை செய்திகளைத் தாங்கிக் குதிரை மீது தூதுவர்கள் பிரயாணம் செய்வது வழக்கம். சீனா தேசத்தில் கி. பி. 1200ம் ஆண்டிலேயே ஒரு நாளைக்கு இம்மாதிரிக் குதிரை தபால்காரர்கள் 250 மைல்கள் பிரயாணம் செய்தார்களாம். ஒவ்வொரு 25 அல்லது 30 மைல்களுக்குக் குதிரைகளை மாற்றிக் கொண்டு பிரயாணம் செய்தார்கள். ஓலை தாங்கிய தூதுவர்கள் மதிப்புடன் நடத்தப்பட்டார்கள். பகையரசர்களும் தூதுவனிடம் வெறுப்பைக் காட்டுவது வழக்கமல்ல. பிற்காலத்தில் தபால் இலாக்காவில் ரன்னர்கள் இதே தகுதியைப் பெற்றிருந்தார்கள்.



6. சாப்பே முறை: 1792ல் பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த கிளாடி சாப்பே (Chaude Chappe) என்பவர் காணும் தந்தி முறைக்கு ஒரு யந்திரத்தை உருவாக்கினார். எழுத்துக்களையும், சமிக்ஞைகளையும் அறிவிக்க இயங்கும் துலாக்கோல் போன்றதோர் அமைப்பைத் தயாரித்தார். மலையுச்சிகளில் இதை நிறுவி புள்ளிகளைக் கொண்டு இதை இயக்கினார்கள். வெகு தூரத்திலுள்ள மற்றோர் மலையுச்சியில் இருந்தபடி அங்குள்ளோர் இத்தத் தூலாக்கோல் அனுப்பும் சமிக்ஞைகளை ஏற்று 'அதை அடுத்துள்ள மற்றோர் நிலையத்துக்கு அதை அனுப்புவார்கள். இம்முறையினால் செய்திகள் 420 மைல்கள் வரை அனுப்பப்பட்டன.



7. மோர்ஸ் முறை: 1837ல் சாமுவேல் மோர்ஸ் என்பவர் மின்சாரத்தினால் இயங்கும் தந்தி முறையைக் கண்டிபிடித்தார். இவர் தம்முடைய புதிய முறை மூலம் பத்து மைல்களுக்கப்பாலுள்ள இடத்துக்குச் செய்தியைத் தந்தி முறையில் அனுப்பிக் காட்டினார். உலகில் முதல் தந்திக்கம்பி இணைப்பு வாஷிங்டனுக்கும் பால்டி மோருக்குமிடையே 1844ல் போடப்பட்டது. ஆல்ஃபிரட் வைல் என்பவரின் துணையுடன் புள்ளி, கோடு இவைகளை சமிக்ஞையாகக் கொண்டு மோர்ஸ் உருவாக்கிய இந்தமுறை இன்றும் புழக்கத்திலுள்ளது. இதற்கு மோர்ஸ் கோடு (Morse Code) என்று பெயர்.




8. கேபிள் முறை: 1830 வரை செய்திகள் பிரயாணம் செய்யக் கடல் ஒரு தடையாக இருந்து வந்தது. அந்த ஆண்டில்தான் அட்லாண்டிக் கடலின் அடியில் சப்மரைன் கேபிள் போடப்பட்டது. முதன் முதலில் பிரான்ஸையும் இங்கிலாந்தையும் கடலின் அடியில் கேபிள் போட்டு இணைத்தார்கள். பல தோல்விகளுக்குப் பிறகு 1858 ஆகஸ்ட் 4ந்தேதி இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்கு முதல் கேபிள் தந்தி போய்ச் சேர்ந்தது.

9. டெலிபோன் முறை: அடுத்து மனிதக் குரலையே அனுப்பும் முறையான டெலிபோன் தோன்றியது. அலெக்சாண்டர் கிரஹாம்பெல் என்ற அமெரிக்கர் 1876ல் முதல் முதலாக மனிதக் குரலை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு மின்சாரத்தின் உதவியால் அனுப்பிக் காட்டினார்.



அடுத்த அறையிலிருந்த தனது உதவியாளரைத் தான் கண்டு பிடித்த யந்திரத்தின் உதவியினால் அழைத்தார். ''மிஸ்டர் வாட்சைன் ஐ வான்ட் யூ!'' இந்த வார்த்தைகளே முதன் முதலில் டெலிபோன் மூலம் பேசிக் கேட்கப்பட்ட வார்த்தைகள்.

10. மார்கோனியின் முதல் ரேடியோ: 1897ம் ஆண்டு ஜூலை மாதம் 17ந்தேதி செய்திப் போக்குவரத்துத் துறையில் ஒரு மகத்தான அற்புதம் நிகழ்ந்தது. வில்லியம் மார்க்கோனி என்பவர், தந்தி சமிக்ஞைகளை ரேடியோ அலைகள் மூலமாக அனுப்பினார். 1901ம் ஆண்டில் 'டிரான்ஸ் அட்லாண்டிக் ஒயர்லஸ் டிரான்ஸ் மிஷனில் வெற்றி கண்டார். ஒரு விநாடிக்கு 1,80,000 மைல்கள்



வேகத்தில் செய்திகள் அனுப்பும் சாதனை உருவாயிற்று. 'ஒயர்லெஸ்' கம்பியில்லாத் தந்தி என்பது செய்தி அலைகள் கம்பி உபகரணத்தின் உதவியில்லாமல் வானவெளியில் செலுத்தப்படும். அதேமாதிரி அவை வேறோர் இடத்தில் பெறப்படும்.


11. ரேடியோ டெலிபோனி: இதையடுத்துத் தோன்றிய முன்னேற்றம் ரேடியோ டெலிபோன். 1915ம் ஆண்டில் இம்முறை பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டது. முதலில் அமெரிக்காவிலிருந்து ஹவாய்த் தீவுக்கும் பிறகு பாரீஸுக்கும் ரேடியோ டெலிபோன் தொடர்பு ஏற்பட்டது. 1927ல் முதல் கடல் கடந்த இணைப்பு—ஒவர்சீஸ் சர்க்யூட் — அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்குமிடையே ஏற்பட்டது. ரேடியோ டெலிபோன்



என்பது ரேடியோ நிலையங்களுடன் தொடர்பு கொண்ட டெலிபோன் நிலையங்களாகும்.

12. டெலிவிஷன் — டெலிபிரிண்டர்: தூர தரிசினி, தொலைவுக்காட்சி என்று இப்போது நீங்கள் கூறும் டெலிவிஷன் 1926ம் ஆண்டில் முதன் முதலில் இங்கிலாந்தில் காட்சியளித்தது. டெலிவிஷன் முறை வேகமான முன்னேற்றங்களை யடைந்தது. இரண்டாவது உலகப்போருக்குப் பிறகு டெலிவிஷனின் வளர்ச்சியும் உபயோகமும் வெகு வேகமாக முன்னேறி உலக முழுதும் பரவலாயிற்று.

இதனிடையே டெலிபிரிண்டர் என்ற யந்திரத்தை 1840ல் றெச். வீட்ஸ்டோன் என்பவர்



உருவாக்கிப் பேடண்ட் பதிவு செய்து கொண்டார். இதற்கு ஆரம்பத்தில் பிரிண்டிங் டெலி கிராஃப் என்றே பெயர். அரை நூற்றுண்டில் இந்த யந்திரம் உலக முழுவதும் உபயோகத்துக்கு வந்துவிட்டது. முக்கியமாகச் செய்திப் பத்திரிகை நிறுவனங்களுக்கு இது ஒரு வரப் பிரசாதம்.

செய்திகளை உலகின் ஒரு மூலையில் இந்த யந்திரத்தில் டைப் செய்தால் மறுகோடியில் அதே போன்று அதே செய்தி அங்குள்ள டெலிபிரிண்டர் யந்திரத்தில் டைப் ஆகும். உரக்கக் கத்திச் செய்திகளைப் பரப்பிய மனிதன் செய்தி போக்குதரத்துத் துறையில் கண்டுள்ள சாதனைகள் மகத்தானது இல்லையா?

ஒரு கொசுவின் கதை

வியட்நாம் நாட்டைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்களே. அந்த நாட்டைப் பற்றி அதிகமாக ஒன்றும் தெரியா விட்டாலும் பல வருடங்களாக 'வியட்நாம் போர் - வியட்நாம் போர்!' என்று பத்திரிகைகளில் அடிபட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்திருப்பீர்களே! இந்த வியட்நாம் நாடு சீனக் கடற்கரையில் உள்ள சிறிய நாடு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு புதிய நாடு தேடி அலைந்த சீன தேசத்து அகதிகள் இங்கு வந்து குடியேறினார்கள். புதிய பிரதேசத்தில் குடியேறியும் இவர்கள் சீனாவில் வாழ்ந்தபோது இருந்த பழக்க வழக்கங்களையே மேற்கொண்டு வந்தனர். அதே மதம் - பௌத்தம், கன்பூஷியனிஸம். ஒரு நாள் ஃபிரான்ஸ் தேசத்துப் பாதிரிகள் இந்த நாட்டில் காலடி வைத்தார்கள். கிறிஸ்து மதத்தைப் பரப்பினார்கள். இன்று வியட்நாமியர்களுள் பாதிப் பேர் கிறிஸ்துவர்கள்.

கிறிஸ்து மதம் வேரூன்றியதும் வியட்நாம், கம்போடியா, லாவோஸ் இவை பிரான்ஸின் ஆதிக்கத்துக்குட்பட்டன. பிரெஞ்சு - இந்தோசீனா என்ற பெயரில் எண்பது ஆண்டுகள் அந்நிய ஆதிக்கத்தில் அல்லல்பட்டுக் கொண்டிருந்தது. திடீரென்று ஒரு நாள் வியட்நாமிய மக்களின் சுதந்திர உணர்வு புயலென வெடித்தது. யுத்தம் மூண்டது. 1954ல் போர் முடிந்து வியட்னாமை இரண்டாகக் கூறு போட்டார்கள். வடக்குப் பகுதி கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்துக்குட்பட்டது. தென் பகுதி குடியரசு நாடாகியது.

வியட்நாம் ஒரு நீண்ட குறுகலான தேசம். மலைகள், காடுகள், சதுப்பு நிலங்களைக் கொண்டது. வடக்குப் பகுதியில் மலைகளும் காடுகளும் அதிகம். விலை மதிப்புடைய தாதுக்களும் நிலக்கரியும் இங்கு ஏராளம். கானகங்களிலும் மூங்கில் காடுகளிலும் —புலி, யானை போன்ற கொடிய விலங்குகள் வாழுகின்றன. தென்பகுதி சமதளமாகவும் சதுப்பு நிலங்களை உடையதாகவும் இருக்கும். வியட்நாமியரின் முக்கிய உணவு அரிசி அது இப்பகுதியில்தான் விளைகிறது.

தென் வியட்நாமில் மாரிக் காலம் என்பது ஜூலையிலிருந்து அக்டோபர் வரை. இந்தக் காலத்தில் சீதோஷ்ண நிலை பகலில் நூறு டிகிரியாகவும் இரவில் அறுபத்தைந்து டிகிரியாகவும் இருக்கும் மற்ற காலங்களில் தொண்ணூறிலிருந்து நூற்று முப்பது டிகிரி வரை இருக்கும். இதன் தலைநகரம் செய்கோன்.

வியட்நாமைப் பற்றிய தகவல்கள் இவ்வளவுதான். கலாசாரப் பெருமை மிக்க இந்நாட்டில் வழங்கும் ஒரு கதையை இங்கே படிக்கப்போகிறீர்கள். -ஆசிரியர்.

★

நம்மைக் கடிப்பது பெண் கொசுக்கள்தான் என்று உங்களுக்குத் தெரியும். (கோகுலத்தில் முன்பு வந்திருக்கிறது) ஏன் பெண் கொசுக்களுக்கு மட்டும் இந்தக் கொடுமையான குணம்? இதற்கு ஒரு கதை வழங்குகிறது வியட்னாமில்.

வெகு காலத்து முன்னாலே **காக் தாம்** என்பவன், தன் மனைவி **நூாம்தீப்** என்பவளுடன் ஒரு சின்னக் கிராமத்தில் வாழ்ந்து வந்தான். இவர்களுக்குக் கொஞ்சம் நிலமிருந்தது. காக் வயலில் நெல் பயிரிடுவான். பட்டுப் புழுக்களை வளர்த்துப் பட்டு உற்பத்தி செய்வாள் தீப். ஒரு சமயம் தீப் ஒரு கனவு கண்டாள்; தான் ஒரு பெரிய மாளிகையில் வசிப்பதாகவும் தன் ஏவலுக்கு ஏராளமான வேலைக்காரர்கள் காத்திருப்பதாகவும். அதுமுதல் அவள் உழைப்பை வெறுக்கலானாள்.

காக் ஒரு நாள் வயலுக்குப் போயிருந்தபோது தீப் திடீரென்று நோய்வாய்ப் பட்டாள். கணவன் வீடு திரும்புமுன் மரணமடைந்தாள். மனைவியின் பிரிவினால் தாங்க முடியாத வேதனையடைந்த காக் அவள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்தனை புரிந்தான். அப்போது அவனுக்கு ஓர் அசரீரி கேட்டது. மனைவி தீப்பின் உடலை, கடலின் நடுவேயுள்ள மாயத் தீவுக்குக் கொண்டு போகும்படிக் கூறியது அசரீரி. அதன் படியே பலநாள் படகு வலித்து முடிவில் மந்திரத் தீவுக்குப் போய்ச்சேர்ந்தான் காக். மனைவியின் உடலைச் சுமந்தபடி செங்குத்தான மலைப்பாதையில் ஏறி, அற்புதமான மலர்கள் பூத்துக் குலுங்கிய ஓர் இடத்தில் அவளைக் கிடத்தினான். உயிரற்ற மனைவியின் உடலுக்கு அருகே மண்டியிட்டபடி தாம் அமர்ந்து கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தபோது நரைத்த தலையும் சுருக்கம் விழுந்த முகமுமான ஒரு முதியவர் தோன்றினார். அவர் கண்கள் ஜ்வலித்தன. அந்தக் கிழவர் காக்கிடம், அவன் அங்கேயே தங்கி அவரது சீடராகி விடுமாறு கூறினார். ஆனால் காக் "நான் என் மனைவி மீது உயிரையே வைத்துள்ளேன். எனக்கு அவள்தான் திரும்ப வேண்டும். வேறு எதுவும் தேவையில்லை" என்றான். மனைவியின் மீதுள்ள பாசத்தைக் கண்ட அந்த முதியவர் "அப்படியானால் சரி. உன் விரலைக்கீறி அதிலிருந்து மூன்று சொட்டு உதிரத்தை உன் மனைவி தீப்பின் மீது விடு" என்றார். காக், அவர் கூறியபடியே செய்தான். என்ன ஆச்சரியம்! அவன் மனைவி தூங்கி விழித்ததுபோல் எழுந்து உட்கார்ந்தாள்.

கிழவர் அவளிடம் நடந்ததைக்கூறி ''நீ உன் கணவனிடம் விசுவாசமாகவும் பணிவோடும் இருக்க வேண்டும். கடுமையாக உழைக்க வேண்டும். இல்லாவிடில் நீ தண்டிக்கப்படுவாய்.'' என்று கூறிப் போய்விட்டார். காக்கும் தீப்பும் படகுக்குத் திரும்பினார்கள். கடலைக் கடந்து வீடு திரும்பும்வழியில் குடும்பத்துக்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்காகக் காக் மனைவியைப் படகிலே தனியே விட்டு விட்டுப் போனான்.

துறைமுகத்தில் அப்போது ஒரு சொகுசான பாய்மரக்கப்பல் வந்து நின்றது. அதன் உரிமையாளன் ஒரு பெரிய பணக்காரன், வியாபாரி. கப்பலின் மாலுமிகள் பாய்மரங்களைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கும் போது அந்த வியாபாரி தீப்பைத் தன்னுடன் தேநீர் அருந்தக் கூப்பிட்டான். அவனுடைய செல்வச் சிறப்பிலே மயங்கிய தீப் தேநீர் அருந்தப் போனாள். அந்தப் பணக்கார வியாபாரி அவள் அழகைப் புகழ்ந்தான். தன் மனைவியாகத் தன்னோடு கப்பலில் வந்துவிடும்படிக் கூப்பிட்டான். கனவு நினைவு வந்தது அவளுக்கு. இத்தகைய உல்லாச வாழ்க்கைக்காகத்தானே ஏங்கிக் கொண்டிருந்தது அவள் உள்ளம். உழைத்து வாழ விரும்பாத அவள் உடனே பணக்கார வியாபாரியின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டாள். தனக்கு முன்பே ஒரு கணவனிருப்பதாக அவனிடம் கூறவில்லை.

காக் குடித்தனப் பொருள்களுடன் திரும்பியபோது அங்கு தீப் இல்லை. அந்தப் பெரிய கப்பலும் இல்லை. ஒரு கிழ மாலுமி அங்கு நடந்ததைக் கூறினான். அந்த அப்பாவிக் குடியானவனான காக்கிடம், அந்தப் பணக்கார வியாபாரி இருக்குமிடத்தையும் சொன்னான். காக்குக்கு ஆத்திரமான ஆத்திரம். கோபமான கோபம். வியாபாரியின் இருப்பிடம் நாடிப் போனான். சில நாளில் அவன் ஊர் அடைந்தான். அரண்மனை போன்றவீடு. அதன் வாயிற் காப்போனிடம், அவனது எஜமானரைக் காண விரும்புவதாகவும் தான் தோட்டத்தில் காத்திருப்பதாகக் கூறும்படியும் சொல்லி அனுப்பினான். தோட்டத்தில் தன் மனைவி தீப் பூப்பறித்துக் கொண்டிருப்பதைக் கண்டான்தாம். கணவனை அங்கு கண்டதும் தீப்புக்கு வியப்பான வியப்பு, தன்னை மறுபடியும் அழைத்துப் போகவே அவன் வந்திருக்கிறான் என்பதைப் புரிந்துகொண்டாள் அவள். ஆனாலும் அவள், தான் அங்கு மிகவும் மகிழ்ச்சியோடிருப்பதாகவும் அவனோடு வரமுடியாதென்றும் கூறினாள்.

எந்த மனைவியிடம் உயிரையே வைத்திருந்தானோ, எவளை அடைவதற்காக இத்தனை சிரமங்களை அனுபவித்துப் பிரயாணங்களை மேற்கொண்டானோ அவளின் நன்றியில்லாத்தனத்தை, அன்பற்ற இதயத்தைப் பார்த்த அவன் மனமுடைந்து போனான்.

''நீ என்னோடு திரும்பிவர வேண்டாம். நான் அதை விரும்பவுமில்லை



என்னுடைய மூன்று சொட்டு ரத்தம் உன் உடலில் இருக்கிறது. அதை மட்டும் எனக்குத் திருப்பிக் கொடுத்து விடு போதும்'' என்றான் காக். தீப்புக்கு ரொம்ப சந்தோஷம். 'இவ்வளவுதானே?' என்று கூறி மலர் கொய்யும் கத்தியினால் விரலில் கீறி ரத்தத்தைச் சொட்ட விட்டான். தாம் ரத்தத் துளிகளைத் தன் கைகளில் ஏந்திக் கொண்டான். மூன்றாவது சொட்டு ரத்தம் வெளிப்பட்டதும் தீப்பின் உடல் கிடுகிடுவென்று சுருங்கியது. எப்படி? ஒரு கொசுவாக! நன்றி மறந்தவனுக்கு, துரோகமிழைத்தவனுக்கு ஏற்ற தண்டனை அது. உருமாறிக் கொசுவான தீப் கணவன் காக்கின் தலையைச் சுற்றிச் சுற்றி வந்தான். 'ஙொய்' என்று ரீங்காரமிட்டான். ''ரத்தத்தைத் திருப்பிக் கொடு.. என்னை மன்னித்துவிடு, மன்னித்துவிடு'' என்று கூறுவது போலிருந்தது அந்தக் கொசுவின் ரீங்காரம்.

காக் தன் படகுக்குத் திரும்பிப் போய் ஏறிக் கொண்டு துடுப்புப் போட்டான். எங்கே? முன்பு மனைவியைத் தூக்கிக் கொண்டு போனானே ஒரு மந்திரமலைக்கு, அங்கே. அன்று தன் சிடனாகும்படிக் கேட்டபோது மறுத்தவன் இப்போது அந்த முதியவரிடம்



போய்த் தன்னைச் சீடனாக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினான். அவரது சீடனான பிறகு ஒருநாள் அவரிடம் தீப்பைப் பற்றிக்கேட்டான். ''தீப்பும், இனி அவள் வழிவரும் எல்லாப்பெண் கொசுக்களும் மூன்று சொட்டு ரத்தத்துக்காக இப்படி அலைந்து கொண்டே தானிருப்பார்கள். இது எல்லா மக்களுக்குமே, நேர்மையாக, பணிவோடு, உழைப்பாளியாக வாழவேண்டும் என்பதற்கு ஒரு பாடமாக இருக்கும்'' என்றார். இப்போது தெரிகிறதா, பெண் கொசுக்கள் மட்டுமே நம் ரத்தத்தைக் குடிப்பதற்கான காரணம் ஏன் என்று?

— கிட்டு


இளகிய மனமுள்ள அரசன்
எல்லாவற்றையும் புசிக்கும் அந்தணன்
தன்வசம் இழந்த ஸ்திரி
கெட்ட இயல்புடைய நண்பன்
கவனக் குறைவுள்ள அதிகாரி
அடங்காத வேலைக்காரர்
செய்நன்றி கொன்றவர்
இவர்களை விலக்கிவிட வேண்டும்.

பஞ்சதந்திரம்



மூளைக்கு வேலை

கீழேயுள்ள படத்தில் 3—லிருந்து, 11—வரையிலான எண்களை ஒரு வட்டத்தில் ஒரு எண் வீதம் எழுத வேண்டும். அப்படி நீங்கள் அமைக்கும் போது ஒரே நேர் கோட்டிலுள்ள மூன்று வட்டங்களின் கூட்டுத்தொகை ஒன்றைப்போல வரவேண்டும். முடியுமா? முயன்றுபாருங்கள்.



விடை:—

இந்தச் சக்கரத்தின் நேர் கோட்டுக் கூட்டுத் தொகை 21. இம்மாதிரிச் சக்கரக் கணக்குகளுக்குப் பொதுவான வழி — பயன்படுத்தும் எண்களின் நடு எண்ணைச் சக்கரத்தின் மையத்தில் எழுத வேண்டும். 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11—இவற்றில் நடு எண் எது? ஏழு இல்லையா..? இதை நடுவில் எழுதிக் கொள்ளுங்கள். இனி ஒவ்வொரு நேர் கோட்டிலுள்ள வட்டங்களிலும் (நடுவைத்தவிர) எழுத வேண்டியதிலுள்ள மிகப் பெரிய எண்ணையும் மிகச்சிறிய எண்ணையும் மாற்றிமாற்றி அமையுங்கள்—11—3, 10—4, 9—5, 8—6.

9 5 3 2 4 1 5 0 1

6 5 3 2 4 1 5 0 3

மேலேயுள்ள இரு எண்களில் மூன்றால் வகுபடக் கூடியது எது? வகுத்துப் பார்க்காமல் பார்வையாலேயே டக்கென்று கூற வேண்டும்.

விடை:—

எந்த ஒரு எண்: அதன் கூட்டுத் தொகையை மூன்றால் வகுக்க முடியுமோ அதுவே மூன்றால் வகுபடக் முடியாது.

9+5+3+2+4+1+5+0+1=30. இதை 3—ல் வகுக்கலாம். ஆகவே, முதல் எண்ணை மூன்றால் வகுபடக் கூடியது. 2—ம் எண்ணின் கூட்டுத் தொகை 32. இதை 3—ல் வகுக்க முடியாது. ''வாண்டு''

வேடிக்கைக் கணக்கு

ரவி ரங்கன், அரவிந்தன், சுதாகர் ஆகிய தன் நண்பர்களை சைலேந்திரன் அழைத்தான். அவர்களுக்கு ஒரு வேடிக்கைக் கணக்குப் போட்டு அவர்களை வியப்பில் ஆழ்த்தினான். அந்த வேடிக்கைக்கணக்கு இதோ:—

சைலேந்திரன்: ரவி! நீ ஏதாவது மூன்று ஸ்தானமுள்ள எண் ஒன்றை நினைத்து அதை ஒரு பேப்பரில் எழுது.

ரவி: சரி, அப்படியே எழுதி விட்டேன் (444 என எழுதிக் கொள்கிறான்.)

சைலே: அதே எண்ணை மறுபடியும் ஒருமுறை அதை ஒட்டி எழுதிக் கொள்.

ரவி: அப்படியே எழுதி விட்டேன். (444 444 என எழுதிக்கொள்கிறான்)

சைலே: அரவிந்தனிடம் அந்த எண்ணைச் சொல்.

ரவி: அப்படியே சொல்லுகிறேன் (444444 எனச் சொல்லுகிறான்)

சைலே: அரவிந்தா! அந்த எண்ணைப் பேப்பரில் எழுதி அதை ஏழால் வகு.

விர: வகுத்துவிட்டேன். (444444 ÷ 7 = 63492)

சைலே: வகுத்துவந்த ஈவை ரங்கனிடம் சொல்.

அர: அப்படியே சொல்லி விட்டேன். (63492 எனச் சொல்லுகிறான்)

சைலே: ரங்கா! அந்த எண்ணை எழுதி அதைப் 11ஆல் வகு.

ரங்: வகுத்துவிட்டேன் (63492 ÷ 11 = 5772)

சைலே: வகுத்துவந்த ஈவை சுதாகரிடம் சொல்.

ரங்: அப்படியே சொல்லி விட்டேன் (5772 எனச் சொல்லுகிறான்)

சைலே: சுதாகர் (அதை எழுதி 13ஆல் வகு.


சுதா: வகுத்துவிட்டேன் (5772 ÷ 13 = 444)

சைலே: நீ வகுத்து வந்த ஈவுதான் ரவி முதலில் நினைத்த எண். அதை அவனிடம் சொல்.

சுதா: ரவி! நீ நினைத்த எண் 444 இல்லையா? அவன் நண்பர்கள் வியந்து போனார்கள்,

(மூன்று ஸ்தானம் உள்ள எந்த எண்ணை நினைத்தாலும் முடிவில் அதே விடைதான் வரும்.) —ஏ. ஆர்.

தெரியுமா?



2873 வெய்யிலில் நாயின் நாக்கிலிருந்து நீர் வடிகிறதே ஏன்...?

2874 பெரும் சத்தம் ஏற்படும்போது நாம் நம்மையறியாமல் வாயைத் திறக்கிறோமே ஏன்...?

2875 இந்தியாவில் தாமிரச் சுரங்கங்கள் எங்குள்ளன...?

2876 இன்றைய ஜாகர்த்தாவின் அன்றையப் பெயர் என்ன...?

2877 இந்தியாவிலுள்ள மிக உயரமான நுழை வாசல் (ஆசாரவாசல்) எது? எங்குள்ளது...?

2878 'ஒப்போசம்' என்ற பிராணி எங்கு காணப்படுகிறது...?

2879 சூரத் நகரம் எந்த நதிக் கரையிலுள்ளது தெரியுமா...?

2880 ஆஸ்திரேலியாவிலுள்ள முர்ரே நதியில் கலக்கும் மிகப்பெரிய உபநதியின் பெயர் என்ன..?

2881 சென்னைக்கருகிலுள்ள பெரம்பூரில் தயாராகும் முக்கியமான உற்பத்திப் பொருள் என்ன..?

2882 கோமதி நதிக் கரையிலுள்ள புகழ்பெற்ற நகரம்..?

2883 ஆஸ்திரேலியாவின் ஒரு மாகாணம் தீவு. அதன் பெயர் தெரியுமா?

2884 ஐக்கிய அமெரிக்காவில் பல பெரிய ஏரிகள் இருந்தாலும் முழுக்க முழுக்க அமெரிக்க எல்லைக்குள்ளேயே உள்ள ஒரே ஏரி எது...?

2885 ஜெனிவா ஏரியின் ஒரு முனையில் சங்கமமாகி மறுமுனை மூலம் வெளியேறும் நதி எது...?

2886 சினாய் மலையுச்சி எந்த நாட்டிலுள்ளது...?

2887 கருங்காடு (Black Forest) எங்குள்ளது...?

2888 கோடா கால்வாய் வழியாக (Gota Canal) எந்த நாட்டில் பிரயாணம் செய்வது...?

2889 ஐரோப்பாவின் வடகோடி நகரங்கள் — லண்டன், பெர்லின் வார்ஸா — இம் மூன்றில் எது...?

2890 இத்தாலியின் மிகப்பெரிய நகரம் எது...?

2891 உலகிலேயே மிக அதிகமாக இரும்பு உற்பத்தி செய்யும் நாடு எது...?

2892 உலகிலேயே மிகப் பெரிய தீபகற்பம் (பெனின்சுலா) எது...?

2893 ஒருபொருள் — அதன் அளவுகள் வருமாறு: உச்சியிலிருந்து அடிவரை 12,713.25 கிலோ மீட்டர். அகலம் 12755.48 கிலோ மீட்டர். இப்பொருளின் பெயர் என்ன..?

2894 ஒட்டைச் சிவிங்கியைப் போலிருக்கும். அதன் ஒட்டிய உறவு கூட. ஆனால், அதைவிட உருவத்தில் சிறியது, அவ்வளவு நீண்ட கழுத்தும் கிடையாது இதற்கு. இதன் பெயர் என்ன...?

2895 கம்போடியாவின் மேற்கு எல்லையை ஒருவன் கடந்தானானால் எந்த நாட்டிற்குள் நுழைவான்...?

2896 காம்பியா நாட்டின் முக்கியமான ஏற்றுமதிப் பொருள் எது...?

தெரியுமே!

2873. நாயின் தோல் மிகவும் தடிமனானது வியர்வை இதன் வழியே வெளிவராது. ஆகவே நாக்கைத் தொங்கவிட்டு அதன் வழியே அதை வெளியேற்றுகிறது நாய். 2874. ஒலி அலைகள் காதின் செவிப்பறையைத் தாக்குமானால் அது கிழிந்து போகும். அந்த அதிர்ச்சியைத் தவிர்க்கவே காற்றை வாய் வழியே இரைத்து செவிப்பறையின் மறுபுறத்தைத் தாக்கச் செய்கிறோம். இதற்குக் காதையும் வாயையும் இணைக்கும் யூஸ்டேசியன் (Eustachian Tube) குழாய் உதவுகிறது. 2875. ராஜஸ்தானிலுள்ள கேத்ரியில். 2876. படாவியா (Batawia). 2877. அக்பரால் 1569-ல் நிர்மாணிக்கப்பட்ட ஃபதேபூர்சிக்ரியிலுள்ள பிரதான நுழைவாயிலான புலந்த் தர்வாஜா 2878. வட அமெரிக்காவில். 2879. தபதி நதிக்கரையில். 2880. டார்லிங் நதி 2881. ரயில் பெட்டிகள். 2882. லக்னோ. 2883, டாஸ்மேனியா. 2884. மிச்சிகன் ஏரி. சுபீரியர், ஹூரான், எரி, ஒன்டாரியோ ஆகியவை கனடாவுக்கும் சொந்தமானவை. 2885. ரோன் (Rhone) நதி. 2886. எகிப்தில். 2887. ஜெர்மனியில். 2888. ஸ்வீடன் தேசத்தில். 2889. பெர்லின். 2890. நேபிள்ஸ். 2891. ஐக்கிய அமெரிக்கா. 2892. இந்தியா. 2893. பூமி. 2894. காங்கோவில் காணப்படும் ஒகாபி என்னும் பிராணி. 2895. தாய்லாந்திலுள். 2896. நிலக்கடலை.

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press Guindy, Madras - 600032.
Editor: K. R. Athmanathan
GOKULAM FORTNIGHTLY, GUINDY, MADRAS - 600032

மாரி மழையே வந்திடுவாய்
மண்ணில் செழிக்கப் பொழிந்திடுவாய்
பாடிப்பாடி அழைக்கின்றோம்
பஞ்சம் பட்டினி தீர்த்திடவா.

கடலைப் போன்ற ஏரிகளும்
கடுகிச் சென்ற ஆறுகளும்
கட்டாந்தரையாய் நீர்வற்றி
கல்லும் மண்ணும் மண்டினவே.

பசுமைப்பச்சைப் பயிர்களுமே
பாங்காய் விளைந்த கதிர்களுமே
வருணா! நீயும் வாராதிடவே
வாடி வதங்கிப் போயினவே.

ஏரிகுளங்கள் நிரம்பிடவே
எங்கும் நீர்வளம் ஓங்கிடவே
எங்கள் பிழைகள் பொறுத்தருளே
ஏற்றம் எமக்குத் தந்திடுவாய்.

அதிகம் பெய்து அழிக்காமல்
அளவில் குறைந்தெமை அலைக்காமல்
அளவாய்ப் பெய்து வறுமையெல்லாம்
அகல நீயும் பெய்திடுவாய்

எங்கள் தாகம் தணித்திடவே
எங்கும் மகிழ்ச்சி பொங்கிடவே
இயற்கைத்தெய்வம்! காத்தருள்வாய்!
இனிதே மழையாய்ச் சொரிந்திடுவாய்

த.கா.சாந்தி



அன்னை காவேரி

ஓடி வருகிறாள் காவேரி!—மக்கள்
உள்ளம் குளிரவே பூவாரி!
பாடி வருகிறாள் காவேரி—அவள்
பாய்ந்து வருகிறாள் சீராடி!

ஆடியில் பதினெட்டன்று. —பொன்னி
அழகுக் குடகு மலையினின்று.
நாடிப்பு துப்புனல் வாரிக்கொண்டு—
வளம்
நாட்டப் பவனி வருகின்றாள்!


வாடும் பயிர்கள் வளர்த்திடவும்—இந்த
வையத்துப் பசி தீர்த்திடவும்,
காடு செழிக்கவும் வருகின்றாள்!—இன்று
கண்கொள்ளாக் காட்சி தருகின்றாள்!

மூடியே விட்ட அணையெல்லாம்—அவள்
முட்டியே மோதித் திறக்கின்றாள்!
தேடிய செல்வம் அ(து) அத்தனையும்—
பொன்னி
தெய்வ மெனவே தருகின்றாள்!

சேடிய ரோடு மனிதர்களும்—அவர்
சிந்தை மிகக் களி கொள்ளுகிறார்!
பாடிய வாழிகள் ஏராளம்!—அவர்
பற்பல மகிழ்வால் துள்ளுகிறார்!

வளங்கொ ழிக்கவே காவேரி—அன்னை
வரம ளிப்பாளே யாவருக்கும்!
மனங்க ளிக்கத்தம் மக்களெல்லாம்!—
பொன்னி
மகிழ்ந்து விரைவாக வருகின்றாள்!

— கோமதி



REGISTERED No. M 9040
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 50 மலேசியன் காசு

